விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ மாசி மீ 25-ம் உ | வெள்ளிக்கிழமை | (09 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 11 | ஓசை 19

## "தமிழீழ ஜனநாயக குடியரசின் தேசிய சட்டமன்றம்"

### --வட கிழக்கு மாகாணசபையின் புதிய பெயர்

(கொழும்பு)

''தமிழீழ ஜனநாயகக் குடியரசின் தேசிய சட்டமன்றம்'' என்று வடக்குக் கிழக்கு மாகணசபையின் ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் திரு. வரதராஜப்பெருமாளை முதலமைச்சராகக் கொண்ட ஈ. பி. ஆர். எல். எவ். குழு தனது பெயரை இப்போது மாற்றிக் கொண்டுள்ளதாக நேற்றிரவு பி. பி. ஸி. தமிழோசை தெரிவித்தது.

அரசிடம் முன்வைத்துள்ள தனது பத்தொன்பது அம்சக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாவிடின் ஒரு வருட காலத்தில் தனிநாடு என்ற முறையில் அதிகாரங்களைப் பயன்படுத்தும் என்றும் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கூறியிருப்பது பற்றி என்ன நடவடிக்கை எடுப்பது பற்றித் தீர்மானிப்பது ஓர் அரசியல் சாஸன நிலக்கண்ணி மேல் நடப்பது போன்றது என்று இலங்கை அரசு கூறியிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஈழப்பிரகடனம் பற்றிய சட்டப் பிரச்சினை பற்றி இன்னமும் அரசு ஆராய்ந்து வருவதாக (6ஆம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பின்
# ஆறாவது திருத்தம்
# விரைவில் நீக்கப்படும்?

## விடுதலைப் புலிகளின் இரண்டு கோரிக்கைகள் நிறைவேறுகின்றன.

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு உள்ள தடங்கல்களையும், சிரமங்களையும் நீக்குவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது பற்றியும் அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. விரைவில் இத் திருத்தம் நீக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறிலங்கா இரா

வமும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடாமல் முகாம்களுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்றும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிறுத்

கள் மூடப்பட்டு ஒரே முகாமுக்குள் வைக்கப்பட்டிருப்பதும் இதர இடங்களில் இராணுவம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படாமல்

விலக்கிக்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும் என வெளிவிவகார பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்கு திரும்புவதற்கு சில சிரமங்கள் இருப்பதாக தெரிவித்திருப்பதாகவும், அதனால் அவர்களின் சுயமரியாதைக்கும், கௌரவத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இந்த அரசியல் சரத்தை (6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக் கள்ளச்சாராயம் அகப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

## மேஜர் காண்டீபனுக்கு யாழ். குடாநாடு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

விபத்தில் மரணமான மேஜர் காண்டீபனின் சடலம் மனோகரா தியேட்டர் சந்திக்கு அருகில் உள்ள புலிகளின் முகாமில் நேற்று வைக்கப்பட்டிருந்த போது பெருந்தொகையான மக்கள் அங்கு சென்று அஞ்சலி செலுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.



மேஜர் காண்டீபனை மோதிய மினிவானும், சாரதியும்.



மேஜர் காண்டீபனுக்கு அஞ்சலி செலுத்து முகமாக நேற்றும் யாழ். குடாநாடு சோகத்தில் மூழ்கியிருந்தது. பஸ் மற்றும் வாகனப் போக்குவரத்துகள் குறைந்து காணபபட்டன பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்து காணப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரியில் வகுப்புகள் எதுவும் நேற்று நடைபெறவில்லை. ஏனைய பாடசாலைகளிலும் மாணவர் வரவு குறைவாகவே இருந்தது.

பல தனியார் கடைகள், வேலைத்தளங்கள், அரசாங்க அலுவலகங்கள் நேற்று மூழ்கிக்கிடந்தன. வீதிகளில் சனங்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

மறைந்த காண்டீபனின் நினைவாக நேற்று தீவுப்பகுதியும் சோகத்தில் மூழ்கியிருந்தது. நேற்று குடாநாடு எங்கும் சோக இசை ஒலிபரப்பப்பட்டது. (தி)

## விபத்துக்குள்ளானவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சில தினங்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரி வீதியில்

# விடுதலைப் புலிகளின் இரண்டு கோரிக்கைகள் நிறைவேறுகின்றன.

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கு உள்ள தடங்கல்களையும், சிரமங்களையும் நீக்குவதற்கு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்த வகையில் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது பற்றியும் அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. விரைவில் இத் திருத்தம் நீக்கப்படுமெனத் தெரிய வருகிறது.**

இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறிலங்கா இராணுவம் குவிக்கப்படக் கூடாதென்றும், இருக்கும் இராணுவமும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடாமல் முகாம்களுக்குள்ளேயே இருக்க வேண்டுமென்றும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிறுத்தப்படவேண்டுமென்றும், அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென்றும் முக்கிய கோரிக்கைகளை முன் வைத்திருந்தது.

மட்டக்களப்பில் சிறிலங்கா ராணுவத்தின் சிறிய முகாம்கள் மூடப்பட்டு ஒரே முகாமுக்குள் வைக்கப்பட்டிருப்பதும் இதர இடங்களில் இராணுவம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படாமல் முடக்கி வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரிவினையைப் பற்றியோ, ஈழம்பற்றியோ பேசுவதற்குக் கூட ஆறாவது திருத்தச் சட்டம் தடை விதிக்கிறதென்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் சட்டத்தின் ஆறாவது சரத்தில் திருத்தத்தை விலக்கிக்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படும் என வெளிவிவகார பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்கு திரும்புவதற்கு சில சிரமங்கள் இருப்பதாக தெரிவித்திருப்பதாகவும், அதனால் அவர்களின் சுயமரியாதைக்கும், கௌரவத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இந்த அரசியல் சரத்தை

(6ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியில் கஞ்சாசெடிகள் கண்டுபிடிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி விவசாயி ஒருவரின் மிளகாய் - வெங்காயத் தோட்டத்தில் பெருந்தொகை கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி - சங்கானை வீதியில் சவரிமுத்து நீக்கிலாஸ் என்பவரின் தோட்டத்தில் வெங்காயம்-மிளகாய் பயிர்களுடன் கலப்பு பயிராக கஞ்சா செய்கை பண்ணப்பட்டிருந்தது தமிழீழ விடுதலைப் புலிகளினால் கண்டுபிடிக்கப்பட்டு கஞ்சா செடிகள் கைப்பற்றப் பட்டன.

## புலமைப்பரிசில் பெற்றோர் புதிய பாடசாலைகளில் சேர்ப்பு

(கொழும்பு)

ஐந்தாம் வருட புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களைப் பாடசாலைகளில் சேர்க்கும் நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இதுவரை பதினையாயிரம் விணணப்பங்கள் கிடைத்துள்ளதாகக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இம் மாதம் 12ம் திகதிவரை விண்ணப்பங்களை அனுப்பலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்புக் கள்ளச்சாராயம் அகப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் வடிகட்டப்பட்ட 45 கள்ளச் சாராயப் பெட்டிகள் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஒவ்வொரு பெட்டியிலும் 12 சாராயப் போத்தல்கள் இருந்தனவாம்.

இவ் வடிசாராயம் சட்ட விரோதமான முறையில் கொழும்பில் ஓர் பிரபல அரசியல்வாதியால் தயாரிக்கப்பட்டு இலங்கையில் பல இடங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது எனத் தெரியவருகிறது. இச்சாரயம் பெருமளவில் புளக்கத்தில் உள்ளதாகவும் தெரியவகின்றது.



மேஜர் காண்டீபனை மோதிய மினிவானும், சாரதியும்.



மேஜர் காண்டீபனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெறவில்லை. ஏனைய பாடசாலைகளிலும் மாணவர் வரவு குறைவாகவே இருந்தது.

பல தனியார் கடைகள், வேலைத்தளங்கள், அரசாங்க அலுவலகங்கள் நேற்று மூழ்கிக்கிடந்தன. வீதிகளில் சனங்களின் நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

மறைந்த காண்டீபனின் நினைவாக நேற்று தீவுப்பகுதியும் சோகத்தில் மூழ்கியிருந்தது. நேற்று குடாநாடு எங்கும் சோக இசை ஒலிபரப்பப்பட்டது. (தி)

## விபத்துக்குள்ளானவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சில தினங்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சபாபதி கந்தசாமி (வயது 68) என்பவர் நேற்று மரணமானார்.

இவர் தலையில் காயமேற்பட்டு சிகிச்சைபெற்று வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## "திடீர் மறைவு தாங்கொண்ணா துயரத்தைத் தருகின்றது"

— ப. நெடுமாறன்

(மட்டக்களப்பு)

மேஜர் காண்டீபனின் மரணச் செய்தி கேட்டுதான் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்ததாக மட்டக்களப்பில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டுள்ள ப. நெடுமாறன் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் காண்டீபன் துடிப்பான இளைஞர். அவருடைய தொண்டின்மூலம் மக்கள்மத்தியில் வெகுவிரைவில் இடம் பிடித்தார். அவரிடமிருந்து நாடு நிறைய எதிர்பார்த்த வேளையில் அவரின் திடீர் மறைவு தாங்கொண்ணாத் துயரத்தைத்தருகின்றது. அவரது சகோதரர் கேடில்ஸ் போலவே தனது உயிரை நாட்டிற்காகக் கொடுத்துள்ளார் அவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனத் தெரிவித்தார்

## அக்கரைப்பற்றில் கொள்ளை

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்று புதுக்குடியிருப்பு என்னும் பகுதியில் கொள்ளையில் ஈடுபட்ட நால்வரை புலிகள் மடக்கிப்பிடித்துள்ளனர். இவர்கள் கொள்ளை இட்டுச் சென்ற ரி. வி. டெக் என்பன கைப்பற்றப்பட்டதோடு சில ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டதாகவும் பின்னர் ரி. வி., டெக் என்பன உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் இடமாற்றத்தை நிறுத்தவும்

### ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் இம்மாதம்பதினைந்தாம் திகதி முதல் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ். இந்து ஆரம்ப பாடசாலையினதும், அதன் சூழலில் உள்ள மாணவர்களின் பெற்றோர் சங்கம் ஜனாதிபதி பிரேமதாஸாவை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

வடக்கில் தேசிய பாடசாலைகளில் ஒன்றான இக்கல்லூரியின் மாணவராக இருந்து ஆசிரியராகி உப அதிபராக பத்து வருடங்கள் பணியாற்றி பின்னர் அதிபரான இவர் இக்கல்லூரியின் நூற்றாண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

கல்வியமைச்சு சுற்றறிக்கை:

## தொண்டர் ஆசிரியர்களை இடைநிறுத்தக் கூடாது

(காங்கேசன்துறை)

பாடசாலைகளில் வசதிகள், சேவைகள் கட்டணத்திலும், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதி உதவியிலும் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களை அவர்களின் சேவையில் இருந்து இடைநிறுத்தக் கூடாது எனவும் அவர்களுக்கு புதிதாக நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை சேவையில் வைத்திருக்குமாறும் மத்திய கல்வி அமைச்சு அவசர சுற்றறிக்கை ஒன்றை சகல கல்விப் பிராந்தியப் பணிப்பாளர்களுக்கும், பதில் கல்விப்பணிப்பாளர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

ஆசிரியர் நியமனங்களில் பயிலுநர் ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டவர்கள் தவிர எஞ்சிய தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ள இவ் வேளையிலேயே பல தொண்டர் ஆசிரியர்கள் பாடசாலைகளைவிட்டு நீக்கப்படுவதாக தமக்குக் கிடைத்த புகாராலேயே இச் சுற்றுநிருப மூலம் அது தடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## பாணின் நிறையைக் குறைக்கும் பேக்கரி மீது கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குறிப்பிட்ட நிறைக்குக் குறைவாக பாண் தயாரிக்கும் பேக்கரி உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆகக்குறைந்தது நானூறு சிராம் பாணிற்கு குறைவாக உள்ள பாண் தயாரிக்கும் பேக்கரிக்காரரர்கள் மீது பல

(6ஆம் பக்கம் பார்க்க )

## பால் மா விலை குறைப்பு

(கொழும்பு)

லக்ஸ்பிறே பால் மாவின் விலை இன்று முதல் குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நேற்றுச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

குறைக்கப்பட்ட புதியவிலைகள் வருமாறு:

100 கிராம் லக்ஸ்பிறே 11ரூ. 40 ச., 250 கிராம் லக்ஸ்பிறே 25 ரூ. 95 ச., 400 கிராம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசசேவைக்கு ஆட்சேர்ப்பு திறமை, சனத் தொகை வீதாசார முறையில்

(கொழும்பு)

அரசாங்கசேவை, மாகாண அரசாங்கசேவை, அரச கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றில் ஊழியர்களை சேர்த்துக் கொள்வது குறித்து தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபை அமைச்சர் யூ. பி. விஜயக்கோன் தெரிவித்த இந்த திட்டத்தை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

எழுதுவிளைஞர் தரம், அதற்கு மேற்பட்ட தரங்களுக்கும் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அரசியல் தலையீடு இன்றி நியமனங்கள் நடைபெறும். திறமை அடிப்படையில் ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகையில் மாவட்ட ஜனத்தொகை அடிப்படையில் இவை மேற்கொள்ளப்படும்.

தேசிய மட்டத்தில் ஆட்சேர்க்கும் போதும் பதவி உயர்வு வழங்கும் போதும் தேசிய இன ஜனத்தொகை அடிப்படையில் இவை மேற்கொள்ளப்படும்.

மாகாணமட்டத்தில் இவை நடைபெறும்போது மாகாண இன விகிதாசாரமும், மாவட்ட மட்டத்தில் நடைபெறும்போது மாவட்ட இன விகிதாசாரமும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

எழுதுவினையர் தரத்துக்கு கீழ்ப்பட்ட தரத்தில் உள்ள

(6-ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

தனிச்சீனியில் அரைத்த 'ஐசிங் சுகர்' எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M., 777, K. K. S. Road, Jaffna. (B/67)

ரைப்பிங்

தமிழ்ரைப்பிங்ஆங்கில இலக்டோனக் ரைப்பிங் வேலைகளை சிரமமின்றி தெளிவாகவும் விரைவாகவும் செய்து முடிக்க சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

தேவை

பிளேட்டின் மெஷின் மைன்டர், கொம்பசிட்டர் வேவை நேரில் வரவும். வேலை பயில விரும்பும் இருபாலாரும் தேவை ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கபடும். K. S. R. K. மில்ஸ், G. P. S லேன், கல்வியன்காடு. (B- 119)

Radio Tv, Air Conditioning-Refregeration வயறிங், வெல்டிங், வைன்டிங், Typing. Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

RAJZ BRAND எவசிர்ல்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற்சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள் பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

# மருதனாமடம் கோட்டக்கல்வி விளையாட்டுப் போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகளை மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு:

13 வயது ஆண்கள் 1. சுதுமலை சித்ம பாரதி வித்தியாசாலை, 2. இடைக்காடு மகாவித்தியாலயம், 3. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

13 வயது பெண்கள் 1. அச்சுவேலி சென். திரேசா மகாவித்தியாலயம், 2. உடுவில் மகளிர்க்கல்லூரி, 3. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

17 வயது ஆண்கள் 1. உரும்பராய் இந்துக் கல்லூரி, 2. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. 3. மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயம்.

17 வயது பெண்கள் 1. மருதனாமடம் இராமநாதன் கல்லூரி, 2. அச்சுவேனி சென். திரேசா மகளிர் வித்தியாசாலை, 3. உடுவில் மகளிர் கல்லூரி.

19 வயது ஆண்கள் 1. சுதுமலை சின்மபாரதி வித்தியாலயம், 2. உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, 3. புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி.

19 வயது பெண்கள் 1. மருதனாமடம் இராமநாதன் கல்லூரி, 2. உடுவில் மகளிர் கல்லூரி, 3. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. (42)

## மெய்வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

நாகர் கோவில் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி வித்தியாலயஅதிபர். திரு.கே. பரமகுரு தலைமையில் நடைபெற்றது.

வடமாரட்சிகோட்டக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர். திரு. பீ.வீரபத்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பிரதம விருந்தினர் வெற்றியீட்டிய மானவர்களுக்சான பரிசில்களையும் வழங்கினார். திருமதி எம். குலசிங்கம் நன்றியுரை வழங்கினார். (25)

## கொக்குவில் விளையாட்டுப் போட்டி

(சுதுமலை)

சித்திரை புதுவருடக் கொண்டாட்டங்களை முன்னிட்டு கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் பல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவுள்ளது. கரப்பந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், ஐந்து வயதுக் குட்பட்டோருக்கான வினோத உடைப் போட்டி ஆகிய இன்னும் பல போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 1-4-1990.

நூல் நிலைய புணருத்தாரணமும், நூல்களைத் திரட்டும் நிகழ்ச்சிகளும் இப் புது வருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கின்றன. (19)

ஈழநாதமே!

உன் செய்திகளை உலகெங்கும் தொடர்ந்து பரப்புவாயாக

எம்மிடம்

விவசாயிகளுக்கேற்ற உரம், மருந்து வகைகள், சயிக்கிள் உதிரிப்பாகங்கள் உண்டு.

மற்றும்

நட்டுக்கள், வாளிகள், கடகப்பெட்டிகள் முதலியவற்றிற்கு தலைசிறந்த இடம்

இராசையா ஸ்ரோர்ஸ்

அச்சுவேலி. B-195

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சேதப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் விற்பதற்கான

கேள்வி அறிவித்தல் பின்போடுதல்

மேற்படி விடயமாக ஈழநாதம் பத்திரிகையின் 23-02-1990 ஆம் திகதிய இதழில் வெளியான கேள்வி அறிவித்தல் பற்றிய விபரம் கீழ்க் காணும் விபரப்படி பின்போடப்பட்டுள்ளன.

1. கேள்விப் படிவங்கள் வழங்குவது:- 21-03-1990 நண்பகல் 12·00 மணி வரை
2. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 23-03-1990 நண்பகல் 12-00 மணிவரை

வி. பி. பாலசிங்கம்,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.
(B 207)

77 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.3
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை

களம் பல கண்ட

காண்டீபனுக்கு

எமது இறுதி அஞ்சலி

## புதிய மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர்களாக தெரிவுப் பரீட்சையை அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ். நகரில் நடாத்தவுள்ளது.

மேற்படி சங்கம் இப்பரீட்

குழு உறுப்பினர்களாக: ஆர். செல்வராசா, கே. யதுகுலசிங், எம். சிதம்பரப்பிள்ளை, ஆர். ஸ்ரீதரன், என். சிவக்குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (42)

காரைநகரில்



விபத்தில் இறந்த

வீர வேங்கை

கப்டன்

காண்டீபனுக்கு

செயன்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

RAJZ BRAND எவசிர்ல்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள் பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

## இறங்கு துறையில் கொள்ளை

(திருகோணமலை)

திருகோணமலை இறங்கு துறையில் வைத்து நேற்று முன்தினம் திரு. சிவலிங்கம் என்ற அதிகாரியிடம் ஐநூறு ரூபா பணத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ் பறித்துச் சென்றுள்ளதாக புகார் செய்யப் பட்டுள்ளது.

## கசிப்பு கண்டுபிடிப்பு

(கோண்டாவில்)

இணுவில் பகுதியில் கசிப்பு ஒழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப் பட்ட இத் திடீர் வேட்டையின் போது உற்பத்திக் கருவிகள் யாவும் அழிக்கப் பட்டதுடன், பெருமளவு கசிப்பு நிலத்தில் வீசப் பட்டது.

இதே வேளை கோண்டாவில், அன்னுங்கை பகுதியில் கசிப்பு உற்பத்தியாளர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப் பட்டதுடன், (43)

த்தவுள்ளது. கரப்பந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், ஐந்து வயதுக்குட்பட்டோருக்கான விநோத உடைப் போட்டி

நூல் நிலைய புனருத்தாரணமும், நூல்களைத் திரட்டும் நிகழ்ச்சிகளும் இப் புதுவருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கின்றன. (19)


நண்பகல் 12-00 மணிவரை

வி. பி. பாலசிங்கம்,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.
(B 207)



(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை



களம் பல கண்ட

காண்டீபனுக்கு

எமது இறுதி அஞ்சலி



நொதேர்ன் இண்டஸ்றீஸ்

112, ஸ்ரான்லி வீதி.

யாழ்ப்பாணம். (B-206)


## புதிய மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர்களாக தெரிவுப் பரீட்சையை அடுத்த மாதம் முற்பகுதியில் யாழ். நகரில் நடாத்தவுள்ளது.

மேற்படி சங்கம் இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகளை இம்மாதம் 11 ஆம் திகதி முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறுமென இச்சங்கத்தின் தலைவர் திரு. க. பூபாலசிங்கம் தெரிவித்தார்.

இச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. பூபாலசிங்கம் உபதலைவர்கள்: பொ. மகேந்திரன், எம். டி. தம்பிராசா, கே. என். வை. மொறிஸ், டி. எம். வேதாபரணம், எஸ். உமாகாந்தன்: செயலாளர்: க. நந்தகுமார், உபசெயலாளர் தனாதிகாரி, என். விமலதாசன், செயற்குழு உறுப்பினர்களாக: ஆர். செல்வராசா, கே. யதுகுலசிங், எம். சிதம்பரப்பிள்ளை, ஆர். ஸ்ரீதரன், என். சிவக்குமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (42)

## இறுதிப் போட்டி

(விசேட நிருபர்)

யாழ்-தெற்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான இறுதி பெய்வல்லுனர் போட்டிகள் யாழ்-கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நாளையும் நளை மறுதினமே நடைபெற உள்ளன.

## காரைநகரில் கலந்துரையாடல்

(தீவுப்பகுதி)

காரைநகர் பகுதி மக்களுடனான கலந்துரையாடல் வைபவமொன்று காரைநகரில் நடைபெற்றது. இக் கலந்துரையாடல் வைபவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ், தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. சஸ்ரோ, தீவுப்பகுதி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் இப்பகுதியில் மக்கள் முன்னணியை கட்டியெழுப்புதல் பற்றி ஆராயப்பட்டது. இப் பகுதி பிரமுகர்கள் தமது பகுதி குறைபாடுகளை விடுதலைப் புலிகளுக்கு எடுத்துக் கூறினர். மரணித்த வீர வேங்கைகளுக்கு இப்பகுதியில் ஞாபகார்த்த தூபிகள் நிறுவுதல், காரைநகர் கசுருணாபீச் பகுதியில் சவுக்கு மரங்கள், அதிகளவு தறிக்கப்படல், வெளிப்பிரதேச உல்லாச பிரயாணிகளால் கலாசார சீர்கேடு உருவாக்குதலை தடை செய்தல் என்பன பற்றியும் அவர்களுக்கு எடுத்து முறையிட்டனர். (15)




விபத்தில் இறந்த
வீர வேங்கை
கப்டன்
காண்டீபனுக்கு
எமது கண்ணீர்
அஞ்சலி

R. B. BOOKING CENTRE

யாழ் - கொழும்பு

பஸ் ஆசனப் பதிவகம்

2-ஆம் கட்டிடம்
(வயிரவர் கோவில் பின்பாக)
மொடல் மார்க்கற்
யாழ்ப்பாணம்.
(B.208)



சீக்கோ கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம்

அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்கள்

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

வாடகைக்கு: அலங்காரப் பந்தல்கள், தகரப் பந்தல்கள், கதிரை, மணவறை

C. I. C. பெயின்ற் வகைகள், எஸ்லோன் பைப் வகை, பூட்டு, பிணைச்சல் வகை, கம்பி வகை, மின்சார உபகரணங்கள், மோட்டார் பம்புகள், எவர்சில்வர் மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் (B/188)

# சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பி. எல். ஓ. வையும் சேர்க்கவேண்டும்

(கோலாலம்பூர்)

உத்தேச மத்திய கிழக்குப் பேச்சு வார்த்தைகளில் பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று மேற்படி இயக்கத்தின் தலைவர் யாசீர் அரபாத் செவ்வாயன்று தெரிவித்தார்.

இஸ்ரேலியர் யாருடன் பேசப் போகிறார்கள்? கண்களுக்கும் புலப்படாதவர்களுடனா? அல்லது கண்களுக்கும் புலப்படாத தூதுக் குழுவுடனா? ஆவியுடனா? இவ்வாறு மலேசியாவுக்கு மூன்று நாட்கள் விஜெயத்தை மேற்கொண்டிருக்கும் அரபாத் மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் தெரிவித்தார்.

பலஸ்தீனியர்களுடைய உரிமையையும், பி. எல். ஓவின் தலைமைத்துவத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு சமாதானத்தை மத்திய கிழக்கில் ஏற்படுத்தமுடியாதென்றும், பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தைக் கைகளால் பொத்தி மறைத்து விட முடியாது என்பதும் இஸ்ரேலியப் பிரதமர் சமீருக்குத் தெரியும் என்று அரபாத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், உத்தேச மகாநாடு தொடர்பாக பி. எல். ஓவின் கருத்துக்களைத் தான் அமெரிக்க ராஜாங்கச் செயலாளருக்கு அறிவித்துள்ளார். என்றும், தான் சமர்ப்பித்த கருத்துத் தொடர்பாக விளக்கம் தரவும் மறுத்துவிட்டார்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் யேம்ஸ் பேக்கர் சமர்ப்பித்த ஆலோசனைகளின் பேரில் கெய்றோவில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும் கஸாஸ்றிப், வெஸ்ட் பாங் ஆகிய திட்டுகளிலுள்ள பலஸ்தீனியர் பங்குபற்றுவதாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் பி. எல். ஓவின் கருத்துப்படி 140,000 குடிசனத்தைக் கொண்ட கிழக்கு ஜெருசலேம் பிரதிநிதிகள் கெய்றோ சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்ற வேண்டுமாம்.

## விபத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகாமையில்ஏற்பட்ட மோட்டார் பவுசருக்கும், ஸாலி மோட்டார் சைக்கிலுக்குமிடையிலான விபத்தினால் மோட்டார் சைக்கிள் சாரதி தனது மூன்று பற்களை இழந்ததோடு,பாரிய காயங்களும் ஏற்பட்டன. உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(35)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(சித்தங்கேணி)

சில தபால் அலுவலகங்களில் முத்திரைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. முத்திரைகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டதைத்தொடர்ந்து முத்திரைகளுக்கான தேவையும் அதிகரித்துள்ளது.



# காஷ்மீர் பிரச்சினையை ஆராய சர்வகட்சி மகாநாடு

## நாட்டின் ஒற்றுமையையும் பாதுகாப்பதாக உறுதி

(புதுடில்லி)

காஷ்மீர் பள்ளத்தாக்கு நிலைமையை அறிந்துவர அரசியல் கட்சிகளின் தூதுக்குழு ஒன்று நேற்று ஜம்மு - காஷ்மீர் சென்றது. புதன்கிழமை புதுடில்லியில் பிரதம மந்திரியின் முயற்சியினால் நடந்த அனைத்துக் கட்சிகளின் கூட்டமொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இக்கட்சிகள் வெளியிட்ட கூட்டறிக்கையில், நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் ஒன்றுபட்டு நின்று பாதுகாப்பது என்று உறுதி பூண்டிருப்பதாகக்கூறப்பட்டுதென தெரிகின்றது. மேலும் நாட்டின் வெளியில் இருந்து இயங்கும் தேச விரோத பகை சக்தி அதிக கடுமையுடன் மீண்டும் தலைதூக்கி ஜம்மு-காஷ்மீரில் மிகுந்த கவலையைத் தோற்றுவித்தன என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இவ்வாறு அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்ட கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்திற்குப் பிரதம மந்திரி வி. பி. சிங், துணைப் பிரதம மந்திரி தேவிலால், உள்துறை அமைச்சர் முக்தி முகமது செய்யது, எதிர்க்கட்சித் தலைவரும் இந்திரா காங்கிரஸ் தலைவருமாகிய ராஜீவ் காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னைய முதலமைச்சர் பாருக் அப்துல்லா, பி. ஜே. பி. சார்பில் வாஜ்பேய், L. K. அத்வானி, சி. பி. ஐ. சார்பில் இந்திரஜித் குப்தா, பாரஜி சி.பி.ஐ.எம். சார்பில் ஹரி கிருஷ்ணசுருஜித், சோமிநாத் பட்டர்ஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டம் சுமார் ஐந்து மணி நேரம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பிரதம மந்திரி வி. பி. சிங் 370-ஆவது சரத்தின் கீழ் ஜம்மு காஸ்மீரில் சிறப்பு நிலை சொல்லிலும் கருத்திலும் பாதுகாக்கப்படும் என்று அழுத்தமாக கூறினார், மேலும் இக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சிகள் இந்திய மக்களின் ஒற்றுமையை குலைக்கும் தவறான முயற்சிகள் எதனையும் எல்லாக் கட்சிகளும் ஒருமித்து நின்று எதிர்க்கும் என்றும் கூறியன.

இதற்கிடையில் ஜம்மு காஷ்மீரின் ஆளுநர் ஜக்மோகன் பள்ளத்தாக்கில் இருந்து சிறுபான்மை இனத்தவரை வெளியேற வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் இதுவரை வெளியேறியவர்களை திருப்பவும் மாநிலத்திற்குத் திரும்பி வரும்படியும், அவர்களுக்காக முகாம்கள் அமைக்கப்படுவதாகவும் கூறினார்.

# பஞ்சாபில் தீவிரவாதிகள் சூட்டதில் 22 பேர் பலி

(அமிர்தசரஸ்)

பஞ்சாபில் பெரஸ்பூர் மாவட்டத்தில் அபோகார் நகரத்தில் புதன்கிழமை மாலை தீவிரவாதிகள் சுட்டதில் குறைந்தது 22 பேர் வரை கொல்லப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. இந்நகரத்தின் சந்தைப்பகுதியில் தீவிரவாதிகள் நவீன துப்பாக்கிகளால் சுட்டனர் என்று பெரஸ்பூர் உதவி பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார், மேலும் அவர் கூறுகையில் மக்களை நோக்கி சக்தி வாய்ந்த ஒரு குண்டையும் தீவிரவாதிகள் எறிந்தார்கள் என்றார்

# ஆப்கானில் கிளர்ச்சியாளருடன் சண்டை நீடிக்கிறது;

## திடீர்ப்புரட்சிக்கு பாகிஸ்தான் உதவி?

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த திடீர்ப் புரட்சி முயற்சியை அடக்கி விட்டதாக அரச அறிக்கைகள் கூறிய போதிலும் அங்கே சண்டை நீடித்து வருவதாக பாகிஸ்தானில் உள்ள வெளிநாட்டு தூதர்கள் கூறுகிறார்கள். புரட்சி செய்த விமானப்படை விமானிகள் தலை நகர் காபூல் மீது குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தியதாகவும் பக்தாம் விமான நிலையத்தை சுற்றியே பெரிய சண்டை நடந்து வருவதாகவும் தூதரகவட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அவ் விமான நிலையத்தின் முக்கிய பகுதிகள் கலகக் காரர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் கூறுகிறது.

காபூலில் ஆங்காங்கு துப்பாக்கிச் சண்டைகள் நீடிக்கிறது என்றும், இப்புரட்சியை ஆரம்பித்த ஆப்கானிஸ்தான் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் தலைமறைவாக வேறிடத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் ஜனாதிபதி நஜிபுல்லா ஆற்றிய வானொலி உரையில் காபூல் சாதாரண நிலைக்கு திரும்பி வருவதாக கூறியிருக்கிறார். அதே வேளை பாகிஸ்தானிய உயர் அதிகாரிகள், பாகிஸ்தானின் எல்லைக்குள் கராச்சியாஸ் என்ற வடமேற்கு நகரத்தில் இரண்டு ஆப்கான் இராணுவ போககுவரத்துவிமானங்களும் ஹெலிகொப்டர்களும் தரை இறங்கி இருப்பதாகவும் அந்த விமானத்தில் நான்கு ஜெனரல்கள் உட்பட இருபது ஆப்கான் இராணுவ அதிகாரிகள் வந்திருப்பதாகவும் அவர்களை பாகிஸ்தானிய அதிகாரிகள் விசாரித்து வருவதாகவும் கூறுகின்றனர். இந்த விமானத்தில் இருந்து இறங்கியதாகவும் கூறப்படுகிறது. இதற்கிடையில் ஹெலிகொப்டரில் 17 அதிகாரிகளும் ஒரு பெண்ணும் பல குழந்தைகளும் வந்ததாகவும் இவர்கள் அரசியல் தஞ்சம் கோரியதாகவும் கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் உள்ள ஆப்கான் கெரில்லாத் தலைவர்கள் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜெனரல் கயை பக்தாம் விமான நிலையத்தில் இருப்பதாக கூறுகின்றனர். ஜலலாபாத் நகரிலுள்ள தனது படைப்பிரிவுகளை காபூலை நோக்கி முன்னேறுமாறு கேட்டுக் கொள்ளும். வானொலிச் செய்தியை தாம் இடைமறித்துக் கேட்டதாக இவர்கள் கூறினர். தங்கள் உதவியை ஜெனரல் கயை கேட்டதாகவும் அதற்கு தாம் எந்த ஒரு கட்சிக்கும் உதவ மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தனர். மேலும் ஆப்கான் கெரில்லாத் தலைமைப் பீடம் தமது போராளிகளுக்கு அரசியல் தஞ்சம் கோரி வருபவர்களுக்கு உதவி புரியுமாறு பணித்துள்ளனர்.

இதனிடையில் பல மூத்த இராணுவ அதிகாரிகள் ஆப்கான் அரசிடம் சரண்

# பிறப்புச் சான்றுப் பத்திரம் ஆங்கில மொழி பெயர்ப்பு எதற்காக ?

(வவுனியா)

சென்ற வருடம் தமிழ் மொழி உத்தியோக மொழி ... பார்வையிடுபவரும் தமிழர். இவ்வாறு செய்யப்படும் நிலையில் பிறப்புச் சான்றுப் பத்திரத்துக்கு ஒரு அன்னிய மொழியில் மொழி பெயர்ப்பு எதற்காகச் செய்யப்பட

## சாதனை

(கொழும்புத்துறை)

யாழ்.கொத்தணியைச் சேர்ந்த துரையப்பா வித்தியாலய மாணவிகள் செல்வி. தில்லைநாதன்-திருமகள், செல்வி கோபாலகிருஷ்ணன் தர்மினி என்பவர்கள் கடந்த

# ஆயுர்வேத கல்லூரி அதிபரின் வேண்டுகோள்

பழைய மாணவர் மன்றத்தை அமைக்குடி, இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் வைத்தியகலாநிதி பசுபதி மகேஸ்வரன் வேண்டிக் கொள்கிறார். ... மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் மேற்படி கல்லூரி காரியாலயத்தில் சந்திக்கலாம் எனவும் கேட்டுகொள்கிறார்.

யும் ஒன்றுபட்டு நின்று பாது காப்பது என்று உறுதி பூண்டிருப்பதாகக்கூறப்பட்டுதென தெரிகின்றது. மேலும் நாட்டின் வெளியில் இருந்து இயங்கும் தேச விரோத பகை சக்தி அதிக கடுமையுடன் மீண்டும் தலைதூக்கி ஜம்மு-காஷ்மீரில் மிகுந்த கவலையைத் தோற்றுவித்தன என்று அந்த அறிக்கை கூறுகிறது.

பி. ஜே. பி. சார்பில் வாஜ்பேய், L. K. அத்வானி, சி. பி. ஐ. சார்பில் இந்திரஜித் குப்தா, பாரஜி சி.பி.ஐ.எம். சார்பில் ஹரி கிருஷ்னன் சுருஜித், சோமிநாத் பட்டர்ஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டம் சுமார் ஐந்து மணி நேரம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பிரதம மந்திரின் ஆளுநர் ஜக்மோகன் பள்ளத்தாக்கில் இருந்து சிறுபான்மை இனத்தவரை வெளியேற வேண்டாமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் இதுவரை வெளியேறியவர்களை திருப்பவும் மாநிலத்திற்குத் திரும்பி வரும்படியும், அவர்களுக்காக முகாம்கள் அமைக்கப்படுவதாகவும் கூறினார்.

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த திடீர்ப் புரட்சி முயற்சியை அடக்கி விட்டதாக அரச அறிக்கைகள் கூறிய போதிலும் அங்கே சண்டை நீடித்து வருவதாக பாகிஸ்தானில் உள்ள வெளிநாட்டு தூதர்கள் கூறுகிறார்கள். புரட்சி செய்த விமானப்படை விமானிகள் தலை நகர் காபூல் மீது குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தியதாகவும் பக்தாம் விமான நிலையத்தை சுற்றியே பெரிய சண்டை நடந்து வருவதாகவும் தூதரகவட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அவ் விமான நிலையத்தின் முக்கிய பகுதிகள் கலகக் காரர்களின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் தலைமறைவாக வேறிடத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் ஜனாதிபதி நஜிபுல்லா ஆற்றிய வானொலி உரையில் காபூல் சாதாரண நிலைக்கு திரும்பி வருவதாக கூறியிருக்கிறார். அதே வேளை பாகிஸ்தானிய உயர் அதிகாரிகள், பாகிஸ்தானின் எல்லைக்குள் கராச்சியாஸ் என்ற வடமேற்கு நகரத்தில் இரண்டு ஆப்கான் இராணுவ போககுவரத்துவிமானங்களும் ஹெலிகொப்டர்களும் தரை இறங்கி இருப்பதாகவும் அந்த விமானத்தில் நான்கு ஜெனரல்கள் உட்பட இருபது ஆப்கான் இராணுவ அதிகாரிகள் வந்திருப்பதாகவும் அவர்களை பாகிஸ்தானிய அதிகாரிகள் விசாரித்து வருவதாகவும் கூறுகின்றனர். இந்த விமானங்கள் பாகிஸ்தானுக்கு வருவதற்கு பாகிஸ்தான் விமானங்கள் பாதுகாப்பு வழ துறை அமைச்சர் ஜெனரல் கயை பக்தாம் விமான நிலையத்தில் இருப்பதாக கூறுகின்றனர். ஜலலாபாத் நகரிலுள்ள தனது படைப்பிரிவுகளை காபூலை நோக்கி முன்னேறுமாறு கேட்டுக் கொள்ளும். வானொலிச் செய்தியை தாம் இடைமறித்துக் கேட்டதாக இவர்கள் கூறினர். தங்கள் உதவியை ஜெனரல் கயை கேட்டதாகவும் அதற்கு தாம் எந்த ஒரு கட்சிக்கும் உதவ மறுத்துவிட்டதாகவும் தெரிவித்தனர். மேலும் ஆப்கான் கெரில்லாத் தலைமைப் பீடம் தமது போராளிகளுக்கு அரசியல் தஞ்சம் கோரி வருபவர்களுக்கு உதவி புரியுமாறு பணித்துள்ளனர்.

இதனிடையில் பல மூத்த இராணுவ அதிகாரிகள் ஆப்கான் அரசிடம் சரண் அடைந்ததாமவும், அல்லது அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

# பிறப்புச் சான்றுப் பத்திரம் ஆங்கில மொழி பெயர்ப்பு எதற்காக ?

(வவுனியா)

சென்ற வருடம் தமிழ் மொழி உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் பாஸ்போட் எடுப்பதற்கு இப்போதும் தமிழ்ப் பிறப்புச் சான்றுப் பத்திரத்தின் பிரதிகள் ஆங்கிலத்தில் கேட்கப்படுகின்றது. இவ்வாறு வவுனியாக் கச்சேரியின் பிராந்தியக் கிளைமூலமாகப் பாஸ்போட் விண்ணப்பம் அனுப்ப வந்திருந்த பொது மக்கள் சிலர் வியப்படைந்தனர்.

அவர்கள் மேலும் கூறியதாவது, ''தமிழ் இன்று அரசாங்க மொழியாகிவிட்டது. தமிழ்ப் பிறப்புச் சான்றுப் பத்திரத்தின் பிரதிநிதிகளை வவுனியா கச்சேரியில் பார்வைஇடுபவரும் தமிழர். இவ்வாறு செய்யப்படும் நிலையில் பிறப்புச் சான்றுப் பத்தி பத்திரத்துக்கு ஒரு அன்னிய மொழியில் மொழி பெயர்ப்பு எதற்காகச் செய்யப்பட வேண்டும்.

தமிழ் மொழி உத்தியோக மொழி என்றால் அதன் நடைமுறைகளும் தமிழுக்கு மாற வேண்டும் என அவர்கள் மேலும்தெரிவித்தனர். (31)

## சாதனை

(கொழும்புத்துறை)

யாழ்.கொத்தணியைச் சேர்ந்த துரையப்பா வித்தியாலய மாணவிகள் செல்வி. தில்லைநாதன்-திருமகள், செல்வி கோபால கிருஷ்ணன் தர்மினி என்பவர்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில், கடந்த பத்தாண்டுகளில் இப்பாடசாலைச் சாதனைகளை முறியடித்துள்ளனர்.

# ஆயுர்வேத கல்லூரி அதிபரின் வேண்டுகோள்

பழைய மாணவர் மன்றத்தை அமைக்குடி, இலங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் வைத்தியகலாநிதி பசுபதி மகேஸ்வரன் வேண்டிக்கொள்கிறார். பழைய மாணவர்கள் எதிர் நோக்கும் பதிவுப் பிரச்சினையை ஆராய்வதற்கும் இக்காலகட்டத்தில் கல்லூரியின் வளர்ச்சி, தமிழர் பண்பாட்டின் மறுமலர்ச்சி, காலா காலமாக கல்லூரி வளர்வுறாது பின்தங்கிய நிலைக்குரிய காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் பழையமாணவர்களை ஒறுபட்டு செயல்படுமாறு வேண்டுகின்றார். இது விடையமாக அதிபரைக் கல்லூரி நாட்களில் காலை 11 மணி தொடக்கம் மாலை ε மணி வரையும் மேற்படி கல்லூரி காரியாலயத்தில் சந்திக்கலாம் எனவும் கேட்டுகொள்கிறார்.

## இராம சேவகர்கள் சந்திப்பு

மூதூர் பெருகல் உதவிஅரசாங்க அதிபர் பிரிவுக்குள் கடமை புரியும் கிராம சேவையாளர்கள் திருமலை அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபன், மூதூர் அரசியல் பொறுப்பாளர் அரசன் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

# வடபகுதி வங்கிகளில் ஊழியர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம் உட்பட வட பகுதியில் உள்ள வங்கிகளில் ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் வங்கிகளில் கருமங்களை சுலபமாகச் செய்ய முடியாதுள்ளதாக வங்கி உயர் அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

அணமைக்கால சம்பவங்களால் பல வங்கி ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர், சிலர் தமதுவேலையை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளா சென்றுள்ளனர் இதனாலேயே இத்த ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

சில வங்கிகளில் தட்டெழுத்தாளர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதால் ஏனைய ஊழியர்களே தட்டச்சு வேலைகளையும் செய்யவேண்டியுள்ளது. இதேபோல ஒருவர் பல வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது.

வடக்கில் நிலைமை வழமைக்குத் திரும்பியிருப்பதால் வங்கிகளின் வேலைகளும் அதிகரித்துள்ளது. ஊழியர் பற்றாக்குறை பற்றி மேலிடத்துக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

# சாவகச்சேரிக்கு வந்த பொலிசாரை புலிகள் திருப்பி அனுப்பினர்

(சாவகச்சேரி)

எதுவித முன் அறிவிப்புமின்றி கிளிநொச்சியிலிருந்து சாவகச்சேரிக்கூடாக யாழ்ப்பாணம் கோட்டைக்குச் செல்ல வந்த கிளிநொச்சிப் பொலிசாரை சாவகச்சேரியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலியினர் தடுத்து நிறுத்தி மீண்டும் கிளிநொச்சிக்கு திருப்பி அனுப்பினர்.

இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;-

கிளிநொச்சியிலிருந்து சில பொலிசார் யாழ்ப்பாணம் கோட்டைக்குச் செல்வதற்காக வாகனம் ஒன்றில் வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது சாவகச்சேரியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. தினேஸ் அவர்களின் வாகனத்தை தடுத்து நிறுத்தி தமது அலுவலகத்திற்கு அழைத்துச்சென்றார்.

திரு. தினேஸ் தமது அலுவலகத்தில் வைத்து இந்தப் பொலிசாருக்கு புத்திமதி கூறினார். அவர் தனது புத்திமதியில் ''தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும் அமைதியையும், ஒழுங்கையும், அன்பையுமே கடைப்பிடிப்பவர்கள். நீங்கள் இப்படி திடீர் விஜயத்தை அறிவித்தலின்றி மேற்கொள்ளும் பட்சத்தில் சில அசம்பாவிதங்களும் ஏற்பட இடமுண்டு என்றும், இது உங்களுக்கும் நல்லதல்ல, எமக்கும் நல்லதல்ல என்று அன்பு மொழிகளால் நட்பு ரீதியாகக் கூறினார்.

இது கேட்ட பொலிசார் மன மகிழ்ச்சியுடன் அவர்களுடன் கைகுலுக்கி பிரியா விடைபெற்று கிளிநொச்சிக்குத் திரும்பினர். (35)

# சாவகச்சேரியில் 'நிதர்ஷனம்' பரீட்சார்த்த ஒளிபரப்பு

(சாவகச்சேரி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ''நிதர்ஷனம்'' என்னும் தொலைக்காட்சி ஒளி பரப்புச் சேவை ஒன்று, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பிரதேசப் பகுதியினரால் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு மூலம், பொதுமக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலியினருக்குமிடையில் நல்ல செயற்பாடுகளை வளர்க்கவும், பரஸ்பரம் செயற்பாடுகளை அறிந்து கொள்ளவும் இது ஒரு பாலமாக அமையும் என நம்பப்படுகிறது.

இந்தப் பரீட்சார்த்த ஒளி பரப்பு பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும். இதை தென்மராட்சிப் பொது மக்கள் இதனைத் தமது தொலைக்காட்சிப் பெட்டிகளில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

பொதுமக்கள் 'நிதர்ஷனம்' தொலைக்காட்சி ஒளிபரப்பினைப் பார்த்து தமது அபிப்பிராயங்களையும், புதிய அம்சங்களை மேலும் சேர்த்துக் கொள்வது பற்றியும் தெரிவித்து, மேற்படி சேவைக்கு உற்சாகமூட்டலாம் என்றும் நம்பப்படுகிறது. (35)

# கடற்கரையில் உலா

(கரவெட்டி)

நீண்டகால இடைவெளிக்குப்பின் பருத்தித்துறை கடற்கரைப் பிரதேசத்தில் பலரும் பொழுது போக்கிற்காக வருகைதருவதனை அவதானிக்க முடிகின்றது.

தினமும் காலையும் மாலையும் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் என்ற பல்வேறு தரப்பினரும் மேற்படி கடற்கரைப் பிரதேசத்திற்கு வந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. (18)

## மாவட்டவைத்திய அதிகாரியும் இடமாற்றம்

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மக்கள் பெரும் கஷ்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இங்குள்ள நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிகுறார்கள். மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியுடன், மற்றும் இரு வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டியிருந்தும் பல வருடங்களாக மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவர் மட்டுமே கடமையாற்றிவந்தார்.

இன்று அவரும் மாறிச் சென்றுவிட்டார். இவரின் இடத்திற்கு உடனடியாக ஒருவர் நிரந்தரமாக நியமிக்கபடல் வேண்டும்.

கிளிநொச்சியில் தினமும் பிற மாவட்ட மக்கள் வந்து குடியேறிய வண்ணம் இருப்பதால், தினமும் இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இவர்களை மூன்று உதவி வைத்தியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் கவனித்துவருகிறார்கள்.

இதுதவிர தாதிமார் பற்றாக்குறை, சிற்றூழியர் பற்றாக்குறை ஆசியனவும் கூடுதலாக உள்ளது. இவற்றால் நோயாளிகளும், வைத்தியர்களும், சிற்றூழியர்களும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கம் அவ் வைத்தியசாலையில் கதிர் இயக்க மண்டபம் ஒன்றைப் பல இலட்ச ரூபா செலவில் கட்டி முடித்துள்ளது. இது தவிர சுற்றுமதில் ஒன்றையும் கட்டி முடித்துள்ளது. வைத்தியசாலையின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக குழாய்க்கிணறு ஒன்றையும் அமைத்தது.

சுகாதார அமைச்சராக இருந்த டாக்டர் ரஞ்சித் அத்தபத்து கதிர் இயக்க இயந்திரம் ஒன்றை மேற்படி வைத்தியசாலைக்கு வழங்க ஒப்புக்கொண்டிருந்தார். அவ் வேளையில் இங்கு இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றதால் அந்த இயந்திரம் கிடைக்காது போய்விட்டது.

அபிவிருத்திக் சங்கத்தினால் கட்டப்பட்ட சுற்று மதிலின் ஒரு பகுதி ஈ. என். டி. எல். எவ். இபக்கம் தமது பாதுகாப்புக்காக உடைந்து நொருக்கியது.

இது தவிர இங்கு ஒரு இரத்த வங்கி இல்லாததால், உடனடியாக இரத்தம் ஏற்றப்படவேண்டிய நோயாளர்கள் நாற்பத்தைந்து மைல் தொலைவிலுள்ள யாழ். வைத்தியசாலைக்கு இரத்தம் ஏற்றுவதற்காக அனுப்பப்படுகிறார்கள்.

அப்போது பலர் மரணித்துமுள்ளனர். இங்கு ஒரு இரத்த வங்கி இருக்குமானால் இம்மாதிரியான இறப்புகளைத் தடுக்கமுடியும், சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொது மக்கள், கேட்கின்றனர்.

# "பயணத்தின் இறுதிக்கட்டம் நெருங்கி விட்டதென்பது பெருமாளுக்கும் தெரியும்"

## --அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா

வடக்கு - கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப் பொழுங்குகளை மீளப்பெற்று அவரையும், அவரது கூட்டாளிகளையும் இந்தியாவுக்கு அனுப்பிவைக்குமாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் எல். எம். மெஹ்றோத்ராவை இலங்கை அரசு கேட்டுள்ளது. இத் தகவலை இந்திய அரசுக்குத் தெரிவிக்க இந்தியத் தூதுவர் புதுடில்லிக்குப் போகவிருப்பதாகப் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாண சபை ஒருதலைப் பட்சமாக ஈழப் பிரகடனம் செய்தமை இலங்கை யாப்பு விதிகளுக்கு முரணானது என்றும், இந்தியா பெருமாளுக்கு ஆதரவு வழங்கினாலும் வழங்கா விட்டாலும், இந்தியா அவருக்கு வழங்கிய பாதுகாப்பு ஒழுங்குகளை மீளப் பெற்று, அவரை ஸ்ரீ லங்காவிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று வடக்குக் கிழக்கு மாகாண சபை ஒரு தலைப் பட்சமாக ஈழப் பிரகடனம் செய்தமைதொடர்பான ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தின் மீது பேசுகையில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணா தெரிவித்தார். "வரதராஜப்பெருமாளையும், அவரது கூட்டாளிகளையும் இந்தியாவுக்குக் கூட்டிச் செல்வதுதான் நல்லது. பெருமாள் உடன்பாட்டை மீறி விட்டார். உண்மையில் இந்தியா கூட இப்பேற்பட்டவருக்கு இடமளிக்கக் கூடாது" — இவ்வாறுதான் இந்தியத் தூதுவருக்குச் சொன்னதாக ரஞ்சன் விஜேரட்ணா தெரிவித்தார்.

அமைச்சர் ரஞ்சன் தொடர்ந்து பேசுகையில, பயணத்தின் இறுதிக் கட்டம் நெருங்கிவிட்டது என்பது பெருமாளுக்குத் தெரிந்து விட்டது என்றும், இந்தியப் படை மார்ச் மாத இறுதியில் அல்லது முன்னதாக இலங்கையை விட்டுப்போகும் போது பெருமாளும் அவர்களுடன் ஓடவேண்டியதுதான் என்றார்.

### பானைக்குள் பிரபாகரன் இல்லை

ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தின்மீது அவர் தொடர்ந்து பேசுகையில்,

தண்ணீர் நிறைந்த பானை ஒன்றில் நண்டைப் போட்டுப் பானையை அடுப்பில் வைத்ததும். நண்டு தான் ஆழ்கடலில் இருப்பதாக நினைக்கிறது. தண்ணீர் கொதிக்கத்தொடங்கியதும் நண்டு தத்தளிக்கிறது. கொதிநீரில் நண்டைப் போன்றதுதான் பெருமாளின் நிலை. அவரால் வெளியில் வர முடியாது. அவர் மேலுக்குத்தான் பார்க்க வேண்டும் என்றார்.

ஆனந்தா திஸாநாயக்க(எஸ் எல். எவ். பி. நுவரெலியா மாவட்டம்)பிரபாகரன் நிலை என்ன?

ரஞ்சன் விஜேரட்ணா: பானைக்குள் பிரபாகரன் இல்லை. ஆனால் நாம் பிரபாகரனுடன் சேர்த்து உங்கள் எல்லோரையும் பானைக்குள் போட முடியும்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பொலிஸ் ஆணைக்குழு மசோதாவை எம். இ. பியும், எஸ். எல். எவ். பியும் எதிர்த்தது. அரசாங்கம் அதிகாரத்தைப் பரவலாக்கத் தயாராகிக்கொண்டிருந்தது. இவ் வேளையில் அம்பாறைமாவட்டத்திலிருந்து முதன் முறையாக இந்திய இராணுவம் விலகியது. பெருமாள் தந்திரமாகத் தமிழர் தேசிய இராணுவத்தை உருவாக்கிப் பயிற்சி முகாம்களை அம்பாறையில் அமைத்தார். இப்படியான இரு முகாம்களைத் தாக்கிய விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் அபகரித்தனர். சட்ட விரோதமான இராணுவ முகாம்களை அமைத்திருந்தும், அப்படி முகாம்கள் இல்லை என்று பெருமாள் மறுப்புத் தெரிவித்தார். முதலமைச்சர் இளைஞர்களைப் பலவந்தமாகப் பிடித்து, இவர்களைப் பயிற்றுவிப்பதற்காக முகாம்களை அமைத்தார். விடுதலைப் புலிகள் மேற்படி முகாம்களின் மீது மேற்கொண்ட தாக்குதலினால் ஈ. பி. ஆர். எல். எவ் இந்தியப் படையின் உதவியுடன் வடக்குக்கும் கிழக்குக்குமான அதிகாரப்பரவலாக்கத்தைக் குழப்பும் கைங்கரியத்தில் இறங்கியது. முதலமைச்சருக்கும் அவரது சகபாடிகளுக்கும் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையே சரியாகப் பாவிக்கத் தெரியவில்லை. அதிகாரப்பரவலாக்கம் போதாது என்று இன்று குறைபடுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் ஒரு யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கத் தயார் நிலையில் இருந்தார்கள். அரசியல் நீரோட்டத்தில் கலந்து தேர்தலில் பங்குபற்றவும் விரும்பினார்கள். ஈ. பி ஆர். எல். எவ். ஒரு சட்டவிரோதமான இராணுவத்தை ஏற்படுத்தி எல்லாவற்றையும்குழப்பியது.

- இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்

# வீர அஞ்சலி

## மேஜர் காண்டீபனுக்கு

உதயம் 14.06.1970

உதிர்வு 07.03.1990



# சட்ட விரோத மின்பாவனை மின்சாரப்பகுதி எச்சரிக்கை

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரசடி வீதி 1-ம் ஒழுங்கை, 2-ம்ஒழுங்கை, 3-ம் ஒழுங்கை, 4-ம்ஒழுங்கை, 5-ம் ஒழுங்கை பழையறோட் ஆகிய பகுதிகளில் குடியிருக்கும் பலர் சட்டவிரோதமான முறையில் இரவு வேளைகளில் மாநகரசபை பிரதான மின் கம்பிகளில் கொழுவி மின்சாரம் பாவித்து வருகின்றனர். இவர்களை சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பல முறை துண்டித்து, எச்சரிக்கை செய்ததையும் பொருட்படுத்தாது இவர்கள் மீண்டும் மீண்டும் களவாக மின்சாரத்தை பாவித்து வருகின்றனர். இதனால் மின் ஒழுக்கு ஏற்பட்டு இப்பகுதியில் வாழும் மக்களுக்கு மின்தடை திடீர் திடீரென ஏற்படுகின்றது. ஆகவே இப்பகுதியிலுள்ள பொதுசன நிலையங்கள்இதற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு முன்வரவேண்டுமென்றும் இச்செயல் தொடருமானால் பாரிய மின்சாரத்தடை ஏற்படக்கூடும் என்றும் யாழ். மாநகரசபையின் மின்சாரப் பகுதி உயர் அதிகாரி அறிவிக்கின்றார்.

# சங்கானை மக்கள் வங்கி கிளையை உடன் திறக்குமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

சங்கானை மக்கள் வங்கிக் கிளையை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி வர்த்தகர்கள், பிரமுகர்கள் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

தற்போது வடபகுதி வழமைக்குத் திரும்பியிருப்பதால் ஏனைய வங்கிகளைப் போல இதனையும் செயற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அம்மஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக சங்கானை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு மற்றும் வலிகாமம் பகுதி மக்கள் தமது வங்கித் தேவைகளுக்காக யாழ்ப்பாணம் சென்று வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் உட்பட பல வர்த்தகர்களும் இந்த வங்கி இல்லாமையால் பணக் கொடுப்பனவுகளுக்காக பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)


ஈழநாதத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்.

ஸ்ரீமர் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

(நல்லூர் M. P. C. S. எரிபொருள் நிலையத்திற்கு (முன்பாக)

'எமது நல்வாழ்த்துக்கள்! 'ஈழநாதம்'

சிவசக்தி ரெக்ஸ்

அன்

புத்தகசாலை

புடவை

பாடசாலை உபகரணங்கள்

மற்றும் ஏனைய சாமான்கள் விற்பனையாளர்

கண்டி வீதி,

கைதடி.

(B-138)

ஈழநாதமே!

உன்பணி சிறந்து ஓங்க

எமது நல்வாழ்த்துக்கள்

கரனுடன் சேர்த்து உங்கள் எல்லோரையும் பானைக்குள் போட முடியும்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பொலிஸ் ஆணைக்குழு மசோதாவை எம். இ. பியும், எஸ். எல். எவ். பியும் எதிர்த்தது. அரசாங்கம் அதிகாரத்தைப் பரவலாக்கத் தயாராகிக்கொண்டிருந்தது. இவ் பிடிக்கத் தயார் நிலையில் இருந்தார்கள். அரசியல் நீரோட்டத்தில் கலந்து தேர்தலில் பங்குபற்றவும் விரும்பினார்கள். ஈ. பி ஆர். எல். எவ். ஒரு சட்டவிரோதமான இராணுவத்தை ஏற்படுத்தி எல்லாவற்றையும்குழப்பியது.

- இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார்




விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பில்
முன்னணி வகித்த இனிய தோழனே!
வீறு கொண்ட விடுதலைப் புலியாய்
களத்தினில் புகுந்து சரித்திரம் படைத்தாய்
களத்தில் உன்னிடம் தோற்ற காலனும்
விபத்தில் வென்ற வேதனை தீருமோ?
இலட்சிய வீரனின் நெடிய பயணத்தில்
இணைவோம், விடுதலை பெறுவோம்

விடுதலைப் புலிகள்
மாணவர் இயக்கம்
(S.O.L.T.)

(B-209)



ஈழநாதத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்.

ஸ்ரீமர் ஹாட்வெயர்

ஸ்ரோர்ஸ்

(நல்லூர் M. P. C. S. எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக)

❋

❋ சயிக்கிள் உதிரிப்பாகங்கள்
❋ கட்டிடப் பொருள் வகைகள்
❋ பெயின்ற் வகைகள்

நாடுங்கள்.

ஸ்ரீமர் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

கல்வியங்காடு

(B. 193)



# புத்தகசாலை

※ புடவை
※ பாடசாலை உபகரணங்கள்

மற்றும் ஏனைய சாமான்கள் விற்பனையாளர்
கண்டி வீதி,
கைதடி.

(B-138)



ஈழநாதமே!
உன்பணி சிறந்து ஓங்க
எமது நல்வாழ்த்துக்கள்

# ALFRED STORES

பல சரக்கு வியாபாரம்

MAIN STREET,
KAYTS.

போன்: 532.

(B205)



வாழ்க ஈழநாதம்!

எங்கள் கைகள் ஒன்றாய் எழுக! இன்புறும் உலகம் இங்கெழவே!

புதிதாய் எழும் ஓர் உலகம்
கூட்டுறவால் இங்கே நிமிர்க.
பிளவுற்றெங்கும் சிதறும் மனிதர்
பிரிவற்றவராய் கையே பிணைக!

நிதான விலையில் தரம் வாய்ந்த பொருட்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் மக்கள் கடைகளை

கூட்டுறவின் வளர்ச்சிக்கு வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றது.

# வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

(B. 200)

### சிந்தனைக்கு

"...வயிர முடையநெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா

-பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 09 - 03 - 90

# பழைய பாடமும் டில்லியின் புதிய அரசும்!

இம்மாத முடிவுக்குள் இந்தியப்படை முற்றாக வெளியேறிவிடும் என்பது உறுதியாகிவிட்டதாகவே தோன்றுகிறது.

இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இராணுவத்தின் பெரும்பகுதி தமிழ் நாட்டிலும் மற்றும் தென்னிந்திய மாநிலங்களிலும் தங்கியிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

இந்திய இராணுவம் இங்கிருந்து முற்றாக வெளியேறும்போது வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாளும் அவர்களோடு சென்றுவிடுவாரென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், மற்றும் இவைகளோடு சேர்ந்த குழுக்களின் உறுப்பினர்களும் குடும்பங்களும் ஏற்கனவே தமிழ் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்துள்ளன. சில தினங்களுக்கு முன்னரும் இக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஐநூறு பேர் தமிழ்நாடு சென்றதாகவும் இன்னும் ஐயாயிரம் பேர் இந்தியாவுக்குச் செல்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்தச் செய்திகளையெல்லாம் முந்திக்கொண்டு இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் கடத்தி வரப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் இராமேஸ்வரத்திலும் நாகபட்டினத்திலும் கைப்பற்றப்பட்டன என்ற செய்திகளும் வந்தன.

இவற்றைத் தொடர்ந்து ஈழப் போராளிக் குழுக்களுடன் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணு முகமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பத்தொன்பது யோசனைகள் கொண்ட மகஜர் ஒன்றை ஈ. பி. ஆர். எல். எவ். சமர்ப்பித்ததுடன் பேச்சுவார்த்தை ஸ்தம்பித்தது.

இதனைத் தொடர்ந்து ஒருவருட அவகாசம்

# நாளை ஆரம்ப விழாக் காணும் கிளிநொச்சி கவின் கலைக் கல்லூரி

1950 ஆம் ஆண்டுமுதல் திட்டமிட்ட குடியேற்ற திட்டங்கள் மூலம் குளம் அண்டி குடிகொண்டோரால் வளம் நிறைந்த பூமியாக வளர்வு கண்டகிளிநொச்சி மாவட்டம் முதன்முதலாக கலைக்கதிர் சொரியும் கவின் கலைக் கல்லூரி ஒன்றை தன்னகத்தே இன்று பெறுகிறது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப்பிரிவு தன் முதன்மைக் கவனத்தை இச்சேவை அவசிய தேவையாக உள்ள திசையில் செறியச் செய்ததன் விளைவேமலரும் இக்கல்லூரி. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா அவர்களும் செயலாளர் திரு யோகி அவர்களும் இக்கல்லூரியை நாளை மாலை 4 மணிக்கு ஆர்ம்பித்துவைக்க உள்ளனர்.

கிளிநொச்சி நகரை அண்மிய பரவிப்பாஞ்சான் கிராமத்தில் அமைகிறது இக்கல்லூரி. இலட்சக்கணக்கான பணமும் இலட்சிய வேட்கை கொண்ட கலை வேங்கைகளின் உழைப்பும் உருண்டு திரண்டு கவின் கலைக்கல்லூரியாக இன்று பரிணமிக்கிறது.

விடுதலை வேண்டும் எம் இனம் தன் பாரம்பரிய கலை கலாசாரப் பண்பாடுகளை பேணிப்பாதுகாப்பதும் தனித்துவம் குலையாத வகையில் நவீன உத்திகளுடன் அதை வளர்ப்பதும் அவசியமாகிறது தவிர போராட்ட சூழ்நிலையின் மத்தியில் இனத்தின் இடையே பெருமளவில் புரையோடியுள்ள கலாசார சீர்குலைவுகளை போதைவஸ்து பாவனைகள், பாலியல் முறைகேடுகள் போன்ற பாதைமாறிய பயணங்களை போக்கடிக்கவும் கலை கலாசாரத்துறை கவனம் அவசியமாகிறது. கவின் கலைக்கல்லூரி அமைப்பும் இந்நோக்கிற்கு உறுதுணை புரியும் என்பது நிச்சயம்.

கிளிநொச்சி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளடங்கும் கிராமங்கள் 27 கிராமிய கலை கலாசார அவைக் குழுக்களாக அமைப்பு பெற்றுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் தனித்தனி கிராமிய இணைப்பாளர்களை உள்ளடக்கிய எழுவர் சபை இயங்குகின்றது. மாவட்டத்தின் மத்திய கலாசார அவை, கிராமிய இணைப்பாளர்கள் மூலம் மாவட்ட சேவைகளை ஒருமுகப்படுத்துகின்றது. மத்திய குழுவிலும் அமைப்புச்செயலாளர் உள்ளடங்க எழுவர் அங்கம் பெறுகின்றனர். கல்லூரி நிர்வகிப்புக்கு ஐவர் கொண்ட இயக்குனர் சபை உண்டு. கல்லூரிக்கான சேர்வு அனுமதி இவ் அமைப்புக் குழுக்கள் மூலம் சகல கிராமங்களுக்கும் பரவலாக வழங்கப்படுகின்றது.

பாரம்பரிய கலை வடிவங்களான தவில், நாதசுரம், வீணை. தம்புரா, வயலின், மிருதங்கம், ஆர்மோனியம், மற்றும் நடனம், சங்கீதம், நடிப்பு, கிற்றார், ஆகியன ஆரம்பபோதனைத் துறைகளாக அமைகின்றன. மேற்கத்திய இசைக்கருவிப்போதனைகள் சில மிக விரைவில் ஆரப்பம் பெறும்.

கிளிநொச்சி வர்த்தகர் சங்கம், மாவட்ட சர்வோதயம், தென் இந்திய திருச்சபை, கிராமியக்குழுக்கள் ஆகியன வழங்கிய தாராள நன்கொடைகள் இவ் அமைப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதும் நன்றியுடன் நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இத்தகைய துறைகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய கலைஞர்களை மட்டும் கொண்ட கிளிநொச்சியில் கலை ஆர்வலர்களான இம் மண்ணின் மைந்தர்களுக்கு இக்கல்லூரி அமைப்பு பெரும் வரப்பிரசாதம் எனலாம். வாய்ப்பு வழங்கப்படுமானால் இங்கும் மணிமணியாகக் கலை வளம் நன்கு பொலியும் என்பதற்கு பிரவேச அனுமதி கோரி குவிந்துள்ள ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களே சான்று பகரும்.

விசாலம் மிக்க ஒரு வீடு இன்று பக்க மண்டபங்களுடனும், அழகியல் அமைப்புகளுடனும் கூடிய ஒரு கல்லூரியாக பரிணமிக்கின்றது. அழகே அமைப்பான காதல் பறவைகள் கீதம் இசைத்து வரவேற்க, முயற் கூட்டம் தலையாட்டி வந்தனம் கூற, பசிய பூச்செடிகளைப் பக்கங்களில் கொண்ட பாதையின் மணல் விரிப்புப் பாதங்களுக்கு இதமூட்டி அழைத்துச் செல்ல, குடில் அமைப்புகளுடன் கூடிய கூடங்கள் எழிலோடு குளிர்ச்சி தர, உள்ளிருந்து வருகின்ற நாதங்கள் மனதுக்கு மகிழ்ச்சி தர... கல்லூரி அமைப்பு மகாகவி பாரதியின் "காணி நிலம் வேண்டும்..." பாடலை நினைவுபடுத்துகின்றது. ஆம். இக்கல்லூரி கூட ஒரு கவிஞன் கனவேதான். விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவு பொறுப்பாளரின் எண்ணக் கனவுகளே வண்ண வடிவமைப்பாக, உழைப்பின் உருவகமாக உருவாகியுள்ளது. கலைத்தாகிகளின் துடிப்பான கரங்களும், கிளிநொச்சி மாதாவின் அபிவிருத்தி விரும்பிகளின் அக்கறையும் இவ் உருவகத்தின் சேர்கலவைகள். இக் கவின் கலைக் கல்லூரி என்ற கலங்கரை விளக்கு கிளிநொச்சியில் கலைத் துறைக்கு எதிர்காலம் இருள் அல்ல என்று கட்டியம் கூறி நிற்கிறது.

கிளிநொச்சி கலை கலாசார அவையின் செயற்பாடுகள் இலக்கியத் துறையிலும் ஒளிர்வூட்டுகின்றன. கிளிநொச்சி படைப்பு இலக்கிய கர்த்தாக்களின் ஆக்கங்களை தேக்கிய கவிதைத் தொகுதி ஒன்றும், சிறுகதைத்தொகுதி பிறிதொன்றும் வெளியிடப்பட முனைப்புகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பாரம்பரிய கலை வடிவங்களை மீட்டெடுக்கும் ஆய்வுகள் ஆரம்பம் பெறுகின்றன. மினி சினிமா திரை அரங்குகளும், சமூக சீர்திருத்தங்களுக்குரிய திரைப்படங்களுடன் சேவைக் களமாக மாறி ஏற்றன ஆற்றப்படுகின்றன. கலை; மக்களுக்காக, இனத்தின் விடுதலைக்காக, உரியன புரிய, ஏனைய மாவட்டங்களும் விரைவில் இத்தகைய உத்வேகம் பெறுமென நம்புவோமாக.

- ப. வை. ஜெயபாலன்

## விக்னேஸ்வரா விளையாட்டு போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் கல்லூரி அதிபர் திரு. கே. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக கச்சேரிக் கணக்காளர் திரு. கே. இராசநாயகம் அவர்களும், சிறப்பு விருந்தினராகக் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சின் செயலாளர் கலாநிதி செல்வி ரி. இராசரத்தினம் அவர்களும் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் சிற்றம்பலம் இல்லம் முதலாம் இடத்தையும்: இராமசாமி இல்லம் இரண்டாம் இடத்தையும், சின்னத்தம்பி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு. வ. கணேசமூர்த்தி நன்றி நவின்றார். (18)

## காரைநகர் கூட்டத்தில் செல்வி மாலினி பேச்சு

# "இந்திய வல்லரசுடனான போராட்டமே உலகில் எம்மை புகழ்பெறச் செய்தது"

(சித்தங்கேணி)

பெற்ற பிரச்சாரக் கூட்டத்...

## ஊர்சுற்றி

எழுதுவது

கவியோகி சுத்தானந்த பாரதியார் காலமானார் என்ற செய்தி கேட்டதும் பழைய நினைவுகள் சில கண் முன்னே வந்து நின்றன.

இரண்டு மூன்று தடவைகள் கவியோகி இலங்கைக்கு வந்திருக்கிறார்.

முதல் தடவை அவர் யாழ்ப்பாணம் வந்த பொழுது ஸ்ரீராமகிருஷ்ணனின் வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்கு அவர் வந்தார். இவர் மட்டுமல்ல இந்தியாவிலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர்கள், எழுத்தாளர்கள், ஞானிகள் யார் வந்தாலும் அவர்களை வித்தியாலயத்துக்கு அழைத்துவந்து மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தி அவர்கள் அறிவுரை கூறிச் செல்வதற்கு ஏற்பாடு செய்து விடுவார் அப்பொழுது அதிபராக இருந்த திரு ச. அம்பிகைபாகன்.

கவியோகியும் வந்து சிறிதுநேரம் சொற்பொழிவாற்றினார்.

இரண்டாவது தடவை சுத்தானந்த பாரதியார் இலங்கைக்கு வந்தபோது நான் மட்டக்களப்பிலிருந்தேன். மட்டக்களப்பு நகரில் திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு அதிபராக இருந்த இராமகிருஷ்ண மிஷன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் வரவேற்பு. கவியோகி ஜப்பானுக்குச் சென்று நாடு திரும்பும் வழியில் இங்கு வந்திருந்தார். இந்த வரவேற்பின் போது வரவேற்புக்குழுவைச்சேர்ந்தவர்களுக்குள் ஏதோ பிரச்சினை ஏற்பட்டிருக்க வேண்டும். இப்பொழுது அது சரியாக ஞாபகமில்லை, திடீரென்று ஒருவர் மேடையில் கவியோகியின் காலில் வீழ்ந்து வணங்கி சில நிமிஷ நேரம் அப்படியே கிடந்து விட்டார்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் இருப்த்தாறு வருடங்கள் மௌனவிரதம் இருந்தவர். பொருள் தொகையான நூல்களை எழுதி வெளியிட்டவர். ஒரு நாளைக்கு ஒரு நூல் எழுத வல்லவர் என்று

## பிறப்பு இறப்பு

குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஐநூறு பேர் தமிழ்நாடு சென்றதாகவும் இன்னும் ஐயாயிரம் பேர் இந்தியாவுக்குச் செல்வதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இந்தச் செய்திகளையெல்லாம் முந்திக்கொண்டு இலங்கையிலிருந்து இந்தியாவுக்குக் கடத்தி வரப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் இராமேஸ்வரத்திலும் நாகபட்டினத்திலும் கைப்பற்றப்பட்டன என்ற செய்திகளும் வந்தன.

இவற்றைத் தொடர்ந்து ஈழப் போராளிக் குழுக்களுடன் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணு முகமாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பத்தொன்பது யோசனைகள் கொண்ட மகஜர் ஒன்றை ஈ. பி. ஆர். எல். எவ். சமர்ப்பித்ததுடன் பேச்சுவார்த்தை ஸ்தம்பித்தது.

இதனைத் தொடர்ந்து ஒருவருட அவகாசம் கொடுத்து வடக்கு கிழக்கு மாகாணசபை ஈழப் பிரகடனம் செய்தது.

இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாணசபை செயலிழந்துள்ளது. கவிழும் கப்பலிலிருந்து உயிர் தப்பிப் பிழைக்கும் நிலையில் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் சகாக்களுமுள்ளனர்.

இவர்களுக்குப் புகலிடம் அளிக்கும் பிரச்சினைதான் இப்பொழுது டில்லிக்கும் தமிழ் நாட்டுக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. மெஹோத்ரா சென்னைக்குச் சென்று முதல்வர் கருணாநிதியுடன் கலந்தாலோசனை செய்திருக்கிறார்.

ஈழத்தில் இப்போது குழுக்களிடையே மோதல் இல்லை; குழுக்களே இல்லை என்று சொல்லலாம். இந்தியப்படை வெளியேற்றத்துடன் குழுக்களும் போய்ச் சேர்ந்துவிடும்.

தமிழ் நாட்டில் குழுக்களிடையே மோதல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் பெரும் பொறுப்பு "சொறிந்தவன் கை சும்மா இராது" என்பதுபோல ஈழத்தில் கொலை கொள்ளைகளில் ஈடுபட்டவர்கள் அங்கும் 'கை நீட்டாமல்' பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பும் தமிழ் நாட்டு அரசுக்கு உள்ளது.

இந்தியாவின் முன்னைய அரசு குழுக்களை வளர்த்து ஈழத் தமிழர்கள் முட்டி மோதிச் சிதறிக் கிடக்க வழி வகுத்தது.

இப்பொழுதும் அங்கு அகதிகளாகச் செல்பவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள். இவர்களைச் சும்மா வைத்திருக்க டில்லி அதிகார வர்க்கமும் விடாது.

அயல் நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற டில்லியின் புதிய அரசு இதைச் செயல்படுத்த வேண்டுமாயின் ஈழத்திலிருந்து புகலிடம் தேடிவந்தவர்கள் விஷயத்தில் விழிப்புடனிருக்க வேண்டும்.

இனியும் முறுகல்நிலை நீடிப்பதற்கு டில்லியும் தமிழ் நாடும் இடமளிக்கமாட்டாதென்றே நம்புவோம்.

டில்லியின் ராஜீவ் அரசு படித்த பாடம் புதிய சிங் அரசுக்கு நல்லபாடமாக இருக்க வேண்டும்.

---

தவிர போராட்ட சூழ்நிலையின் மத்தியில் இனத்தின் இடையே பெருமளவில் புரையோடியுள்ள கலாசார சீர்குலைவுகளை போதைவஸ்து பாவனைகள், பாலியல் முறைகேடுகள் போன்ற பாதைமாறிய பயணங்களை போக்கடிக்கவும் கலை கலாசாரத்துறை கவனம் அவசியமாகிறது. கவின் கலைக்கல்லூரி அமைப்பும் இந்நோக்...

தென் இந்திய திருச்சபை, கிராமியக்குழுக்கள் ஆகியன வழங்கிய தாராள நன்கொடைகள் இவ் அமைப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதும் நன்றியுடன் நினைவில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

இத்தகைய துறைகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய கலைஞர்களை மட்டும் கொண்ட கிளிநொச்சியில் கலை ஆர்வலர்களான இம்...

கரங்களும், கிளிநொச்சி மாதாவின் அபிவிருத்தி விரும்பிகளின் அக்கறையும் இவ் உருவகத்தின் சேர்கலவைகள். இக் கவின் கலைக் கல்லூரி என்ற கலங்கரை விளக்கு கிளிநொச்சியில் கலைத்துறைக்கு எதிர்காலம் இருள் அல்ல என்று கட்டியம் கூறி நிற்கிறது.

கிளிநொச்சி கலை கலாசார அவையின் செயற்பாடுகள் இலக்கியத் துறையிலும் ஒளிர்வூட்டுகின்றன. கிளி...

காளர் திரு. கே. இராசநாயகம் அவர்களும், சிறப்பு விருந்தினராகக் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சின் செயலாளர் கலாநிதி செல்வி ரி. இராசரத்தினம் அவர்களும் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் சிற்றம்பலம் இல்லம் முதலாம் இடத்தையும்: இராமசாமி இல்லம் இரண்டாம் இடத்தையும், சின்னத்தம்பி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு. வ. கணேசமூர்த்தி நன்றி நவின்றார். (18)

---

## காரைநகர் கூட்டத்தில் செல்வி மாலினி பேச்சு

# "இந்திய வல்லரசுடனான போராட்டமே உலகில் எம்மை புகழ்பெறச் செய்தது"

(சித்தங்கேணி)

மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இளம்வயதில் பணிவு, அடக்கம், பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற நல்ல பண்புகள் மாணவர்களிடையே இருந்தால்தான் சிறந்த சமுதாயமொன்றை உருவாக்க முடியும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி. மாலினி காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர் மத்தியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

செல்வி.மாலினி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறிக்கொண்டு சில மாணவர்கள் அடாவடித்தனமான செயல்களில் ஈடுபடுவதாக ஆசிரியர் ஒருவர் புகார் தெரிவித்துள்ளார். சம்பந்தப்பட்ட மாணவர்கள் யாரென்பதை இனங்கண்டு அவர்கள் நடந்து கொண்ட முறை பற்றி தெரிவித்தால், அச்சம்பவத்தில் உண்மையிருந்தால் நாம் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம்.

நாம் எல்லா மாணவர்களையும்முழுநேரமாக இயக்கத்தில் சேர்ந்து உழைக்குமாறு கேட்கவில்லை. வீரமும், துணிச்சலும், மனவலிமையும் மிக்கவர்கள் மாத்திரம் விரும்பினால் ஆயுதப்பயிற்சி பெற்று முழுநேரமாகப் போராடுவதற்குத் தம்மை அர்ப்பணிக்கலாம். ஏனைய மாணவர்கள் பகுதிநேரமாகத் தமது பங்களிப்பினைப் பல்வேறு வழிகளிலும் எமக்கு வழங்கலாம். பெண் விடுதலை பற்றி பிரஸ்தாபிந்நார்நர் எமது ஈழம் சகல துறைகளிலும் விடுதலை பெறும்போது, பெண் விடுதலையும் கிடைத்துவிடும்.

நாம் எந்த நிலையிலும் ஆயுதங்களை எவரிடமும் ஒப்படைக்கத் தயாரில்லை. இந்திய வல்லரசுடன் நாம் நடத்திய ஆயுதப் போராட்டமே உலக அரங்கில் எம்மைப் பிரபல்யமடையச் செய்தது. இந்திய இராணுவத்தை நாம் எதிர்த்துப் பேராடினோம். அவர்களை எமது ஆயுதங்களால் அடித்து வெளியேற்றியிருப்போம் ஆனால் மக்களுக்கு ஏற்படும் பேரழிவினைத் தடுப்பதற்காகவே சமரசமான முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்கிறோம்.

இலங்கை அரசுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் மூலம் எமது பிரச்சினைகள் தீர வழி பிறக்கலாம். இல்லையேல் ஆயுதப்போராட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்வோம்.

மாணவர்கள் பலரும் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். செல்வி. மாலினி சகல கேள்விகளுக்கும் பதிலளித்தார். நீண்டநேரமாக இக் கூட்டம் நடைபெற்றது. (32

---

## வவுனியாவில் வள்ளுவர் விழா

(வவுனியா)

ஓமந்தை இந்து மாமன்றம், ஓமந்தை மகாவித்தியாலய மாணவர்களுடன் இணைந்து நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 9-00 மணிக்கு ஓமந்தை மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென இந்துமாமன்றம் (ஓமந்தை) அறிவித்துள்ளது,

இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வவுனியா அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் கலந்து கொள்வார். இவ் விழாவில் அருட்திரு. J கனகரத்தினம் அடிகளார். ஜனாப் அ. றகுமத்துல்லா B. A., அருட்திரு. விக்ரர் அவிதப்பர் அடிகளார், திருமதி எம். அற்புதராஜா (உதவி அரச அதிபர் வ. தெ. த. பிரிவு - வவுனியா) திருமதி பி. ஐயம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவர்.

சிறப்புச் சொற்பொழிவினை சிவத்தமிழ்ச்செல்வி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி ஆற்றுவார்.

இவ்விழாவில் பாடசாலை மாணவர்களின் பேச்சு, கலை நிகழ்ச்சிகள், திருக்குறள் அறிவுப்போட்டி என்பனவும் நடைபெறும். (31)

---

# ரயில்வே கடவைகளில் தடையை மீறி செல்கின்றனர்

(கோண்டாவில்)

ரயில்வே கடவைகளில் விபத்துக்கள் ஏற்படுவதை தடுக்க தற்போது நாடு முழுவதும் உள்ள ரயில் கடவைகளில் பாதுகாப்பு ஊழியர்களை அரசு நியமித்துள்ளது.

யாழ்ப்பாண பகுதியில் சில ரயில்வே கடவைகளில் இந்த ஊழியர் ரயில் வரும்போது கயிறு கட்டியே, அல்லது சிகப்பு கொடி காட்டியோ வீதியை கடக்க வேண்டாம் எனக் கூறியும் சிலர் அதனை மீறிச் செல்வதாக புகையிரதப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில இடங்களில் ரயில்பாதைகளில் சிறுவர்கள் ரயில் வரும்போது கண்டபடி விளையாடித் திரிவதாகவும், ரயில் பாதையில் சில பொருட்களை வைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

---

## மக்கள் மடல்

### பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரம்

ஆசிரியர்,
ஈழநாதம்
ஐயா,

கடந்த புதன்கிழமை 28 - 02 - 90ல் வெளிவந்த ஈழநாதம் பத்திரிகை 3ஆம் பக்கத்தில் 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட சகல பிறப்பு - இறப்பு - திருமண விண்ணப்பங்களுக்குரிய அத்தாட்சிப்பத்திரங்கள் யாவும் அந்தந்த விண்ணப்பங்களுக்குரிய விலாசதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என மேலதிக மாவட்ட பதிவாளர் கூறியதாக எழுதியிருந்தீர்கள். நான் கடந்த 29 - 08 - 1989 இல் எனது அவசர தேவைக்கு A 18230 இலக்கத்தைக் கொண்ட விண்ணப்பம் மூலம் யாழ். செயலகத்தேயுள்ள பிறப்பு - இறப்பு விவாகப்பதிவாளருக்கு எனது விவாகச் சான்றிதழுக்கு விண்ணப்பித்திருந்தேன் (முத்திரை பெற்றுக்கொண்டதற்குரிய பற்றுசீட்டு இல. P. 566378 - ரூபா 15) இதுவரை எனக்கு விவாக அத்தாட்சிப்பத்திரங்கள் கிடைக்கவில்லை.

இதுபோன்று இன்னும் பலருக்கு அனுப்பப்படவில்லை. பிறப்பு - இறப்பு - விவாக அத்தாட்சிப் பத்திரங்கள் நேர்மையான வழியில் எடுப்பதற்கு பொது மக்கள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். பொதுமக்களின் கஸ்டத்தை உணர்ந்து சில அதிகாரிகள் நடப்பதில்லை!

இப்படிக்கு,
செ. இ. விஜயபாலன்
ஆனைக் கோட்டை

---

கவியோகி ஜப்பானுக்குச் சென்று நாடு திரும்பும் வழியில் இங்கு வந்திருந்தார். இந்த வரவேற்பின் போது வரவேற்புக்குழுவைச்சேர்ந்தவர்களுக்குள் ஏதோ பிரச்சினை ஏற்பட்டிருக்க வேண்டும். இப்பொழுது அது சரியாக ஞாபகமில்லை, திடீரென்று ஒருவர் மேடையில் கவியோகியின் காலில் வீழ்ந்து வணங்கி சில நிமிஷ நேரம் அப்படியே கிடந்து விட்டார்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் இருபத்தாறு வருடங்கள் மௌனவிரதம் இருந்தவர். பொருள் தொகையான நூல்களை எழுதி வெளியிட்டவர். ஒரு நாளைக்கு ஒரு நூல் எழுத வல்லவர் என்று பெயர் பெற்றவர். இந்திய விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்ட பெரும் வீரர். "நீ என்ன சாதி என்று கேட்டால். தமிழ்ச் சாதி என்று சொல், என்ன குலம் என்று கேட்டால் தமிழ்க்குலம் என்றுசொல், இனம் என்ன என்று கேட்டால் தமிழ் இனம் என்று சொல்" என்று தமிழே எல்லாம் என்று சொல்லிக் கொடுத்தவர்!

மூன்றாவது தடவை கவியோகி யாழ்ப்பாணம் வந்தபொழுது நான் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

எழுத்தாளர் சங்கம் என்று நினைக்கிறேன். பல பெரியவர்களுக்குப் பட்டம் வழங்கிக் கௌரவிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தது தங்கத்தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்குப் ஒரு பட்டம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தியப்பட்டத்தை கவியோகி சுத்தானந்த பாரதியார் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்து துண்டுப்பிரசுரத்திலும் அழைப்பிதழிலும் அறிவிக்கப்பட்டிருந்தது.

சோமசுந்தரப் புலவர் 'பட்டம் கொடுப்பவன் யார்? வாங்குபவன் யார்?'' என்று கேள்வி எழுப்பி தனக்குப் பட்டம் கொடுப்பதற்குக் கவியோகிக்குத் தகுதியிலை என்று குறிப்பிட்டிருந்தார்.

பட்டம் பெறுவதற்கு புலவர் போகவேயி லை.

★ ★ ★ ★

ஈழநாதம்

## வீதிகளில் மின் விளக்குகள்

(தீவுப் பகுதி)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் நாரந்தனை உப அலுவலக எல்லைக்குளுள்ள பிராதன இடங்களுக்கு வீதி மின் விளக்குகள் அமைக்கப் பட்டுள்ளன. இவ் வீதிகளுக்கு ரியூப் லைற்றுககளே பெரும் அளவு பொருத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. (15)

## துவக்கு வெடித்து ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுத் துப்பாக்கி வெடித்ததில் பொன்னுத்துரை நவரட்ணம் (40) என்பவர் காயங்களுக்குள்ளானார்.

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இவர் மிருக வேட்டைக்கு செல்வதற்காக சட்டுத் துப்பாக்கிக்கு மருந்து போட்டுக் கொண்டிருந்த சமயமே மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

தற்போது இவர் வைத்திய சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (தி)

## பெருமாளுக்கு தமிழ் நாட்டில் தங்குமிட வசதி



வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளுக்கு இந்தியாவில் தங்கியிருக்க வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்திய ராஜதந்திரி ஒருவர் இது குறித்து தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியுடன் நேற்று முன் தினம் பேச்சு நடாத்தியதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

திரு. வரதராஜப் பெருமாள் திருகோணமலையிலிருந்து இந்தியப் படையினருடன் அழைத்துச் செல்லப்படலாம் என்றும், தமிழ் நாட்டில் அவருக்கு பாதுகாப்பான புகலிடம் ஒன்றை பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாக இப் பேச்சுக்கள் இடம் பெற்றதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சர்வகட்சி மகாநாட்டில் பேராளர்களின் செயற்குழுக் கூட்டம்

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டின் பேராளர்களின் முதலாவது செயற்குழுவின் கூட்டம் எதிர் வரும் 14-ஆம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. 1989 ஒக்டோபர் மாதம் 12-ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொண்ட ஒவ்வொரு அரசியல் கட்சிகளையும் குழுக்களையும் உள்ளடக்கிய பேராளர்கள் குழுவொன்று அமைக்க வேண்டுமென இணக்கம் காணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1989 செப்டம்பர், ஒக்டோபர் காலப்பகுதியில் ஜனாதிபதி பங்குபற்றிய உசாத்துணைக் கூட்டங்களின் போது மேலும் ஆராயப்பட வேண்டுமென இணக்கம் காணப்பட்ட சில முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்ந்து ஒருமைப்பாட்டுக்கு வரவிருக்கின்றது. பின்வரும் விடயங்கள் பரிசீலனைக்காக எடுத்து இக்குழு ஒருமைப்பாட்டுக்கு வரவிருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கல், தேர்தல்முறைக்கான சீர்திருத்தங்கள், சர்வஜனவாக்குரிமை விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் இறுதிஎல்லை, சிறுபான்மையினரது பிரதிநிதித்துவம், வெகுசன ஊடகங்களுக்கு சுதந்திரம் வழங்குதல், அரச கருமமொழிக் கொள்கையில் பயனுறுதி வாய்ந்த அமுலாக்கம், கல்விக்கொள்கை, அனைவருக்கும் சமத்துவ ஒப்பரவும் வழங்கப்படுதல், தேசிய காணிக் கொள்கை ஒன்றை வகுத்துக் கூறுதல், ஜனநாயக செயல்முறைஒன்றை வகுத்துக் கூறுதல் அடிப்படை உரிமைகளைப்பாதுகாப்பளித்தல் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ளவர்களது பாதுகாப்புக்குஉத்தரவாதம் அளித்தல் அத்துடன் இளைஞர் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட சில சிபார்சுகளும்பேராளர் செயற்குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன. இளைஞர் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஐம்பத்தொரு சிபார்சுகளில் நாற்பத்திமூன்று சிபார்சுகள் ஜனாதிபதியினால் நடைமுறைப் படுத்துவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் விரிவான உசாவுதலுக்கும் ஆராய்தலுக்கும் உட்படுத்தவேண்டியஎட்டு சிபார்சுகள் செயலாளர், செயற்குழுவின்பரிசீலனைக்காக ஆற்றுப் படுத்தப்பட்டுள்ளன.

பேராளர் செயற் குழுவினால் கருத்து ஒருமைப்பாட்டுக்கு வருகின்ற விடயங்கள் நாட்டு மக்களின் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் அவ்விடயங்களை சட்ட உருவத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் எல்லாக் கட்சிகளது ஆதரவைப் பெறுதல் வேண்டும். முன்னர் இடம் பெற்ற இரண்டு சர்வகட்சி மகாநாடுகளுக்கும் சமூகமளித்திருந்த எல்லா அரசியல் கட்சிகளுக்கும், குழுக்களுக்கும் இப்பேராளர் செயலாளர்குழுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன. இன்று பதினெட்டு அரசியல்கட்சிகள்இதில்கலந்து கொள்வதற்கான விருப்பத்தினைத் தெரிவித்துள்ளன. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இது பற்றி எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

பேராளர் செயற்குழுவின் அலுவல்களை கூடிய விரைவில் முடிக்கும் நோக்கத்தில் அதன் கூட்டங்கள் அடுத்தடுத்து கூட்டப்படவுள்ளன. எல்லா அரசியல் கட்சிகளினதும் ஆதரவிலான ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்தும் நோக்குடன் மேற்படி கூட்டம் சம்பந்தமாக எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

## உணவு தயாரிப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உணவு கையாளும்நிலையங்களின் உரிமை யாளர்கள், ஊழியர்களுக்கான கருத்தரங்கொன்று எதிர் வரும் 29 ஆம் திகதி மடத்தடி ஜூபிலி மகப்பேற்று நிலையத்தில் நடைபெற உள்ளது.

யாழ். மாநகரசபை சுகாதார உத்தியோகத்தர்களினால்நடாத்தப்படும் இக்கருத்தரங்கில் உணவு தயாரித்தல், விற்பனை செய்தல் சுகாதாரம் போன்றவற்றைப்பற்றி போதனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## மக்கள் முன்னணி தீவுப் பகுதியில் அரசியல் வேலைகள்

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் இயக்கமான மக்கள் முன்னணியின் அமைப்பு வேலைகள் தீவுப் பகுதியில் ஆரம்பமாகியுள்ளன. இதன் ஆரம்பகட்டமாக மக்கள் முன்னணியின் அலுவலகமொன்று வேலணையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதியின் பல பாகங்களிலும் மக்கள் முன்னணிக் கிளை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ, இவ்வமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி வருகின்றார். (15)

## இறுதிப் போட்டி

(விசேட நிருபர்)

யாழ். தெற்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான இறுதி மெய் வல்லுனர் போட்டிகள் யாழ்: கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. (21)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

## சங்க புனரமைப்பு கூட்டம்

(கிளிநொச்சி)

வட மாகண விவசாய விசாவிப்பு சேவையாளர் சங்க புனரமைப்புக்கூட்டம்11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வவு

## முல்லைத்தீவில் மீண்டும் இணக்க சபை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேச இணக்க சபைகள் கடந்த இரண்டு வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன. இந்திய இராணுவத்தின் அடாவடித்தனத்தினால் இயங்க முடியாமல் போன இச்சபை தற்பொழுது இந்நிலை மாற்ற முற்றிருப்பதிலால் மக்களின் அன்றாட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக இயங்கத் தொடங்கியுள்ளது.

## அடம்பனில் விளையாட்டுப் போட்டி

(மன்னார்)

மன்னார் அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. இப் போட்டிக்கு பிரதம விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபரும், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் சுபன், அரசியல் பொறுப்பாளர் சுரேஷ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மண்கும்பானில் மணல் அள்ளத் தடை

(வேலணை)

மண்கும்பானில் இருந்து ஏற்றப்பட்டு வந்த மணல் நேற்று (8. 3. 90) முதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. கிராமத்தின் இயற்கை வளத்தைப் பாதுகாத்துக் சொள்ளும் நோக்கத்திற்கு அமைவாகவும் நல்ல குடி தண்ணீருக்கு வழிகோலுவதின் நோக்கத்திற்காகவுமே இவ்வாறு தடைகளை விடுதலைப் புலிகள் விதித்திருக்கின்றனராம் எனத் தெரிவிக்கின்றது. (14)

## முல்லைத்தீவு
## கிராமங்கள் தோறும் சிற்றூரவை அமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பிரதேசம் சம் எங்கும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியற் கட்சியின் சிற்றூர் அவைகளை கிராமங்கள் தோறும் அமைப்பதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் மனோ ஈடுபட்டுள் பட்டுள்ளார். கடந்த புதன் கிழமை குமுளமுனைக் கிராம சேவைப் பிரிவில் இக் கிளையினை அங்குரார்ப்பனம் செய்து வைத்துப் பேசுகையில் இக் கட்சி முழு அளவில் பொதுமக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதால் இக் கட்சியில் அங்கம் வகிப்பவர்கள் ஒழுக்க சீலர்களாவும், சேவை மனப்பான்மை உள்ளவர்களாவும் ஒவ்வொரு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

## அப்பியாசக் கொப்பிகளுக்கான தட்டுப்பாடு நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் அப்பியாசக் கொப்பிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க அரச அச்சக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுமார் பத்து லட்சம் அப்பியாசக் கொப்பிகள் தருவிக்கப்

கர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சக கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விபத்தில் இளம்பெண் காயம்

## உதவி அரச அதிபர் பிரிவுகளில் அளவைகளுக்கு சீல் வைக்கப்படும்

(கொழும்பு)

நிறுவை, அளவை உபகரணங்களுக்கான சீல் குத்தும் பணி விரைவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை வாரியாக விரிவு படுத்தப்படவுள்ளது.

யாழ். மாநகரப் பகுதியும்

திகதியிலிருந்து பதினாறாம் திகதிவரை பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும், இருபத்தியோராம் திகதியிலிருந்து முப்பத்தியோராம் திகதி வரை சங்கானை உதவி அரசாங்க அதி

விற்பனை செய்தல் சுகாதாரம் போன்றவற்றைப்பற்றி போதனை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மக்கள் முன்னணியின் அமைப்பு வேலைகள் தீவுப் பகுதியில் ஆரம்பமாகியுள்ளன. இதன் ஆரம்பகட்டமாக மக்கள் முன்னணியின் அலுவலகமொன்று வேலணையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதியின் பல பாகங்களிலும் மக்கள் முன்னணிக் கிளை அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வீ.கஸ்ரோ, இவ்வமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி வருகின்றார். (15)

வகுத்துக் கூறுதல், ஜனநாயக செயல்முறைஒன்றை வகுத்துக் கூறுதல் அடிப்படை உரிமைகளைப்பாதுகாப்பளித்தல் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ளவர்களது பாதுகாப்புக்குஉத்தரவாதம் அளித்தல் அத்துடன் இளைஞர் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட சிலசிபார்சுகளும்பேராளர் செயற்குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன. இளைஞர் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஐம்பத்தொரு சிபார்சுகளில் நாற்பத்திமூன்று சிபார்சுகள் ஜனாதிபதியினால் நடைமுறைப் படுத்துவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் விரிவான உசாவுதலுக்கும் ஆராய்தலுக்கும் உட்படுத்தவேண்டியஎட்டு சிபார்சுகள் செயலாளர், செயற்குழு அதன் கூட்டங்கள் அடுத்தடுத்து கூட்டப்படவுள்ளன. எல்லா அரசியல் கட்சிகளினதும் ஆதரவிலான ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்தும் நோக்குடன் மேற்படி கூட்டம் சம்பந்தமாக எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

னார் அரசாங்க அதிபரும், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் சுபன், அரசியல் பொறுப்பாளர் சுரேஷ் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கள் மக்கள் முன்னணியின் அரசியற் கட்சியின் சிற்றூர் அவைகளை கிராமங்கள் தோறும் அமைப்பதில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் மனோ ஈடுபட்டுள்ளார். கடந்த புதன் கிழமை குமுளமுனைக் கிராம சேவைப் பிரிவில் இக் கிளையினை அங்குரார்ப்பனம்

துவப்படுத்துவதால் இக் கட்சியில் அங்கம் வகிப்பவர்கள் ஒழுக்க சீலர்களாவும், சேவை மனப்பான்மை உள்ளவர்களாவும் ஒவ்வொரு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

## இறுதிப் போட்டி

(விசேட நிருபர்)

யாழ். தெற்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான இறுதி மெய் வல்லுனர் போட்டிகள் யாழ்: கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன. (21)

## சங்க புனரமைப்பு கூட்டம்

(கிளிநொச்சி)

வட மாகண விவசாய விசாவிப்பு சேவையாளர் சங்க புனரமைப்புக்கூட்டம்11ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியா விவசாயக் கல்லூரி பண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிங்களத் தேர்ச்சி இன்மையால் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் வேளைக்கு அமர்த்துதல் சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதால்சகல அங்கத்தவர்களையும், புதிதாகச் சங்கத்தில் சேரவிரும்புபவர்களையும் இக் கூட்டத்தில் தவறாது சமூகமளிக்கும் படிசங்கச்செயலாளர் ஞா.வி. இரட்ணசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

(கொழும்பு)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின(இடது) பிரபல தொழிற் சங்கவாதியுமான மறைந்த கே. ஏ. சுப்பிரமணியத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் 11ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4மணிக்குக் கொழும்பு விஜேயராம மாவத்தையில் உள்ள இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

திரு. கே. நடனசபாபதி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் ஜனாப். ஹாலிம் இஸாக் எம். பி, திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா எம். பி. உட்பட பலர் உரையாற்றுவார்கள்.

## அரசியலமைப்பின்

(1ம் பக்க தொடர்ச்சி)

ரத்து செய்வது குறித்து ஜனாதிபதி பரிசீலிப்பார் எனவும் அமைச்சர் கூறினார்.

நாட்டிலுள்ள மூன்று இன மக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக இருந்து வழிவகைகள் காண வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் சொன்னார்.

கடந்த கலவரத்தில் சிங்களவரும், தமிழரும் தவறு செய்திருப்பது உண்மைதான் ஆனால் கடந்த காலத்தைப் பற்றி பேசாது எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

தமிழகத்தில் இருந்து திரும்பி வரும் அகதிகளை வரவேற்பதாகவும், விடுதலைப் புலிகள் இவர்களைக் கொல்லும் அளவுக்கு கொடுமையானவர்கள் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# நெல்லின் உத்தரவாதவிலை 525 ரூபாவாக நிர்ணயம்

(கிளிநொச்சி)

ஒருமூடை நெல்லின் உத்தரவாதவிலை 525 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள், வியாபாரிகள், விடுதலைப் புலிகள் ஆகியோர் மத்தியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே இவ் உத்தரவாதவிலை நிர்ணயிக்கப்பட்டது.

கிளிநொச்சியில்நடைபெற்ற இக் கலந்துரையாடல் விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கோபி தலைமையில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டவன்னி மாவட்ட பொறுப்பாளர் சந்திரன் பேசுகையில் கூறியதாவது:-

நெல்லின்விலை அதிகரித்து விட்டதாக யாரும் கருதக் கூடாது. இறக்குமதி அரிசியுடனும், கோதுமை மாவுடனும் ஒத்துப்பார்க்கையில் எமது நெல்லின் விலை கூடுதலாக இல்லை.

நெல்லின் உத்தரவாத விலையை 600 ரூபாவாக்கும் படி விவசாயிகள் கேட்கிறார்கள். நெல்லைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகளோ, அந்த விலைக்கு நெல்லைக் கொள்முதல் செய்தால் அதை விற்பனவு செய்ய முடியாது என்கிறார்கள்.

விவசாயிகளும் நஷ்டமடையாது, வியாபாரிகளும் நஷ்டமடையாது இருக்க வேண்டும். பொது மக்களும் அரிசிவிலை உயர்வால் பாதிக்கப்படாது இருக்க வேண்டும். ஆதலால் நெல்லின் உத்தரவாத விலையை 525 ரூபாவாக நிர்ணயிக்கிறோம். இந்தவிலைக்கு குறையாது நெல்லை வாங்க வியாபாரிகள் முன்வர வேண்டும் என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து புதியரக நெல்லினங்களை உற்பத்தி செய்து அரசாங்கத்திற்கு வழங்கும்தெரிவு செய்யப்பட்ட விவசாயி கந்தசாமியும் பேசினார்.

## பாணின்.".

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறை எச்சரிக்கைகள் செய்தும் அதனை மீறி வருகின்றனர் என்று யாழ் செயலக பாவனையாளர் விலைக்கட்டுப் பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் இருநூற்று ஐம்பது கிராம் நிறை கொண்ட பாண் நாலு ரூபா ஐம்பது சதத்திற்கு விற்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

மேலும் தற்போது எமது பிரதேச நிலைமை சுமூகமாக உள்ளபடியால் தகுந்தவர்களிடம் முறையீடு செய்யப்பட்டு அவர்கள் மூலமாக பேக்கரி உரிமையாளர்கள் மீது அவ்வப்போது கடும் நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (லோ)

# அப்பியாசக் கொப்பிகளுக்கான தட்டுப்பாடு நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் அப்பியாசக் கொப்பிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க அரச அச்சக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுமார் பத்து லட்சம் அப்பியாசக் கொப்பிகள் தருவிக்கப் பட்டுள்ளது. இவை கூட்டுறவு சங்கங்களுக்கும் பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

சுமார் முப்பத்தைந்து லட்சம் கொப்பிகள் வியட்னாமிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.

சில இடங்களில் அதிக விலைக்கு கொப்பிகள் விற்கப்படுவதாகவும் அந்த வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அச்சக கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## விபத்தில் இளம்பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை வீதியில் நேற்று சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில், சைக்கிளில் வந்த ரட்னேஸ்வரன் சாந்தாதேவி என்ற இளம்பெண்(21) பலத்த காயங்களுக்குள்ளானார்.

இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (தி)

# இளவாலைப் பகுதி நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

பெரியவிளான், இளவாலைப் பகுதி மக்களில் பலர் இன்னமும் ஆயிரம் ரூபா, நாலாயிரம் ரூபா நிவாரணப் பணம் பெறவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கே இவை வழங்கப்படவில்லையென்றும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கபபடுகிறது.

இதற்காக இவர்கள் தத்தமது கிராமசேவகர்களிடமும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் அலைந்து திரிகிறார்கள். (12)

## பால் மா..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதியபைக்கற்றின் விலை 40ரூ 40 ச., 500 கிராம் 50 ரூ., 1 கிலோ 98ரூ 50 ச.

உலகில் பால்மாவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாலேயே இவ்வாறு குறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். இந்துக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைபவங்களுக்கு ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர், கல்வி அமைச்சர், உயர் கல்வி அமைச்சர், மேல் மாகாண ஆளுநர் திரு எஸ். சர்வானந்தா, முன்னாள் சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி, வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## வைத்தியசாலை திருத்தப்படவில்லை

(தீவுப்பகுதி)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள யாழ். மாநகரசபையின் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை பல குறைபாடுகளுடன் இயங்கிவருகின்றது.

கடந்த கால அசம்பாவிதக் களினால் இதன் கூரை பாதிங்கப்பட்டுள்ளது. (15)

# உதவி அரச அதிபர் பிரிவுகளில் அளவைகளுக்கு சீல் வைக்கப்படும்

(கொழும்பு)

நிறுவை, அளவை உபகரணங்களுக்கான சீல் குத்தும் பணி விரைவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை வாரியாக விரிவு படுத்தப்படவுள்ளது.

யாழ். மாநகரப் பகுதியும் கிளிநொசசிப் பகுதியும் தற்போது முடிவடைந்துள்ளது. இம் மாதம பன்னிரெண்டாம் திகதியிலிருந்து பதினாறாம் திகதிவரை பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும், இருபத்தியோராம் திகதியிலிருந்து முப்பத்தியோராம் திகதி வரை சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் இம் மாதம் வேலைகள் நடைபெற உள்ளது என்று யாழ். செயலக நிறுவை. அளவைப்பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

விரைவில் நகைக்கடைகளுக்கான சீல் குத்தும் வேலைகள் முடிவடைந்ததும், ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டு சீல் குத்தப்படாத நகைக் கடைகள் மீது அந்த அந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் நடவடிக்கைகளை எடுப்பர் எனவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

## அரச சேவைக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியமனங்களுக்கு சகல வெற்றிடங்களும் மாவட்ட அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன.

அரசாங்க கூட்டுத்தாபனத் துறை சம்பந்தமாக விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## தமிழீழ ஜனநாயக..

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

இலங்கையின் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா கூறினார்.

ஈழப்பிரகடனச் சட்டப் பிரச்சினைபற்றி பிரபலதமிழ் வழக்கறிஞர் நீலம்திருச்செல்வம் கருத்து வெளியிட்டார்.

முதலமைச்சர் வரதராஜப் பெருமாள தாம் பதவியிழந்து விட்டதாகத் முதலில் தெரிவித்தார். பின்னர் இதை மறுத்தார். பதவி விலகல் செய்யாது மாகாணக் குழு கலைக்கப்படமாட்டாது. பதவி விலகல் இல்லாது மாகாணசபை நிறைவேற்றிய பிரகடனத் தீர்மானம் சட்ட விளைவுகளற்ற வெறும் தீர்மானமே என்று திரு. நீலன் திருச்செல்வம் கூறினார். அரசியல் சாசனத்தின் கீழ் மாகாணசபையைக் கலைக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லையென்றும் ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாணக் குழுவின் நிர்வாகத்தைத் தானே எடுத்துக் கொள்ளலாமென்றும் திரு. நீலன் கூறினார்.

## நிவாரணக் கொடுப்பனவுகள்

எதிர்வரும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் உடுப்பிட்டி, உடுப்பிட்டி வடக்கு, வல்வெட்டித்துறை தெற்கு, தொண்டமனாறு, கொக்குவில் மத்தி, கொக்குவில் கிழக்கு ஆகிய கிராமசேவைப் பிரிவிலுள்ளவர்களுக்கு ஆயிரம்ரூபா நிவாரணம் வழங்கப்படும்10ம்திகதி சனிக்கிழமை அன்று உடுப்பிட்டி, உடுப்பிட்டி வடக்கு, ஆகிய கிராம சேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கு நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையிலும் வல்வெட்டித்துறை தெற்கு, தொண்டமனாறு ஆகிய கிராமசேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கு இலங்கைவங்கியின் பருத்தித்துறைக் கிளையிலும், கெக்குவில் மத்தி, கொக்குவில் கிழக்கு ஆகிய கிராமசேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கு இலங்கை வங்கியின் யாழ்ப்பாண 2ம் கிளையிலும் வழங்கப்படவுள்ளன. கொக்குவில் கிழக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ளவர்களுக்கு 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிவாரணம் வழங்கப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.